# "Truely **Sri Lankan**"









වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

Annual Report

2012

ශ්‍රී ලංකා හස්ත කර්මාන්ත මණ්ඩලය

இலங்கை கைப்பணிகள் சபை

Sri Lanka Handicrafts Board

LAKSALA

State Gift & Souvenir Boutique

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நோக்கும் செயற்பணியும் | 02 |
| தலைவர்ஃபிறி அதிகாரியின் மீளாய்வு | 04-08 |
| பணிப்பாளர் சபை | 09 |
| சிரேட்ட முகாமைத்துவக் குழு | 10 |
| தொழிற்பாட்டு மீளாய்வு | |
| நிர்வாகம் | 11 |
| நிதிசார் அறிக்கையிடலுக்கான பணிப்பாளரின் பொறுப்புடமை | 12 |
| கணக்காய்வு, முகாமைத்துவக் குழவின் அறிக்கை | 13-14 |
| நிதிக் கூற்றுக்கள் | |
| நிதிசார் விளக்கங்கள் | 17 |
| நிதி நிலைமைக் கூற்றுக்கள் | 18 |
| விரிவான நிதி நிலைமை | 19 |
| நிதி நிலைமைக் கூற்று - சொத்துக்கள் | 20 |
| விரிவான வருமானக் கூற்று - வருமானம் | 21 |
| உற்பத்திக் கணக்கு - செயற்திட்டப் பிரிவு | 22 |
| நிதி நிலைமைக் கூற்று - செயற்திட்டப் பிரிவு | 23 |
| விரிவான வருமானக் கூற்று - செயற்திட்டப் பிரிவு | 24 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 25 |
| பெறுமதிச் சேர்க்கை கூற்று | 26 |
| உரிமையாண்மை மாற்றங்கள் தொடர்பான கூற்று | 27 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 28-42 |
| கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 43-62 |
| கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்கான தலைவரின் அவதானிப்புக்கள் | 63-68 |
| பத்து வருட நிதிசார் மீளாய்வு | 69 |
| சபையினால் எடுத்துக˙காட்டப்படும் முக்கிய அம்சங்கள் | 70 |



*"புதிய சந்தை நடைமுறைகள் தொடர்பான கல்வி, உள்ளூர் மற்றும் சர்வதேசச் சந்தைகளைத் தொடர்புபடுத்துதல், புதிய வடிவமைப்புக் கோட்பாடுகளை அறிமுகப்படுத்துதல், மற்றும் பாரம்பரியத் திறன்கள் மற்றும் எதிர்காலத் தலைமுறைகளுக்கான கலைகளை அழியாது பாதுகாப்பதே பாரம்பரியக் கைத்தொழிற் துறையின் முதன்மையாக உள்ளது."*

***(மகிந்த சிந்தனைப் பிரகடனம் 2010)***

# எமது நோக்கு:

இலங்கையில் பரிசுப் பொருட்கள் மற்றும் நினைவுப் பொருட்களின் சந்தையில் முன்னணி நிறுவனமாக விளங்குதல்

# எமது செயற்பணி:

பாரிய சந்தைகளுக்கு கிராமிய உற்பத்திப் பொருட்கள் சென்றடைவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துகின்ற வர்த்தக ரீதியாக வெற்றியடையக் கூடிய சமூகப் பொறுப்புமிக்க சந்தைப்படுத்தல் நிறுவனமாக விளங்குவதன் மூலம் பரிசுப் பொருட்கள் மற்றும் நினைவுப் பொருட்களின் வகையீட்டின் உள்ளார்ந்த வளர்ச்சியினை மேம்படுத்துதலும் சுறுலாத்துறைக்கு பெறுமதி சேர்த்தலும்.

# எமது முக்கிய பெறுமானங்கள்:

- வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்துதல்
- கிராம சமூகங்களுக்கிடையே பெறுமானங்களை உருவாக்குதலும் பெறுமானங்களைப் பகிர்ந்துகொள்ளலும்
- சிறந்த வாடிக்கையாளர் தெரிவுகளுக்கான பல்முகப்படுத்தப்பட்ட வாய்ப்புக்கள்
- தரம், நம்பகத்தன்மை மற்றும் பணத்துக்கான பெறுமதி



# தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

## பின்னணி

இலங்கை கைப்பணிச் சபையின் லக்சல 2012 ஆம் ஆண்டின் செயலாற்றுகை மீளாய்வினை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன். உள்நாட்டு கைப்பணியாளர்களுக்கு உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் லக்சல நிறுவனம் 1964 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவையின் துணை நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் இலங்கை கைப்பணிச் சபையாக நிறுவப்பட்டது. லக்சல இத்துறையிலுள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான மிகப் பழையதும் மிகப் பெரியதுமான விற்பனை வலையமைப்பாக வளர்ச்சியடைந்துள்ளது.

## புதிய போக்குகள்

2009 ஆம் ஆண்டில் அதிமேதகு சனாதிபதி அவர்களால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க லக்சல நிறுவனத்தின் பணிகள் மீள்கட்டமைப்புக்காக திறமுறை தொழில்முயற்சி முகாமைத்துவ முகவராண்மையின் (SEMA) மேற்பார்வையின் கீழ் கொண்டு வரப்பட்டது. 2011 ஆம் ஆண்டு முதல் நிறுவனத்தின் செயற்பாடுகள் மீள்கட்டமைக்கப்பட்டு வருகின்றன.கடந்த இரு வருடங்களிலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பயனாக லக்சல நிறுவனம் அடுத்துவரும் 05 வருடங்களில் தனது திறமுறைத் திட்டமிடலின் ஊடாக புரள்வையும் இலாபத்தையும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டில் நிலவும் சமாதான சூழ்நிலையின் காரணமாக உல்லாசப் பயணிகள் சுற்றுலா மேற்கொள்வதற்குப் பொருத்தமான ஒரு நாடாக இலங்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதனை அடுத்து லக்சல நிறுவனத்தின் வர்த்தகச் செயற்பாடுகளும் மிகவும் முன்னேற்றம் கண்டுள்ளன. 2012 ஆம் ஆண்டில் சாதனை படைக்கும் அளவுக்கு உல்லாசப் பயணிகள் வருகை 1,005,605 (பத்து இலட்சத்து ஐயாயிரத்து அறுநூற்று ஐந்து) ஆகக் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் முதன் முறையாக சுற்றுலாத் துறையின் மூலமான வருமானம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்தது. சுற்றுலாத் துறை அமைச்சினால் செய்யப்படும் பாரியளவிலான சர்வதேச விளம்பர மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளின் கீழ் 2016 ஆம் ஆண்டில் உல்லாசப் பயணிகளின் வருகை 2.5 மில்லியனாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதனுடன் இணைந்த வகையில் இந்த உல்லாசப் பயணிகளுக்குத் தேவையான உள்நாட்டுப் பரிசுப் பொருள் மற்றும் ஞாபகார்த்தப் பொருட்கள் சந்தை விரிவடையும். அதன் மூலம் லக்சலவுக்கு பாரியளவிலான சந்தை வாய்ப்புக்கள் கிடைக்கும்.

## உபாயமுறை முன்னெடுப்புக்கள்

2011 ஆம் ஆரம்பிக்கப்பட்ட மீள்கட்டமைப்புச் செயற்பாடுகளின் மூலம் புரள்வும் இலாபமீட்டும் தன்மையும் நிலைபேறான இருப்புக்கு அத்தியவசியமான நுகர்வோரைக் கவரும் தன்மையும் அதிகரிக்கப்பட்டதுடன் தேவைகளுக்கும் கேள்விக்கும் பொருத்தமான முறையில் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதாவது,

- தனது சந்தைப்படுத்தல் பொருட்களின் வகைகளைப் விரிவுபடுத்தி புதிய சந்தைகளைப் பெறுதல் (Category Expansion).
- வர்த்தக நாமமிடல் (டீசயனெபை) மூலம் நிறுவனத்தின் பெயரை சந்தையில் உறுதியடையச் செய்தல்
- உபசரிப்புமிக்க நுகர்வோர் சேவைக்குத் தேவையான முறையில் ஊழியர்களிடம் சிறந்த மனப்பாங்குகளை கட்டியெழுப்புதல்.

லக்சலவின் வர்த்தகப் பெயரின் கீழ் அறிமுகஞ் செய்யப்பட்ட லக்சல சந்தைப்படுத்தலின் அனைத்துப் பொருட்களும் மென்மேலும் விரிவாக்கப்பட்டு அவற்றின் தரமும் மேம்படுத்தப்பட்டது. ஒரே கூரையின் கீழ் இலங்கையின் உற்பத்திகளை அன்பளிப்பு மற்றும் ஞாபகார்த்தப் பொருட்களாக உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கும் நுகர்வோருக்கும் இலகுவாகப் பெறுவதற்கு தேவையான வசதிகள் மேலும் விரிவுபடுத்தப்படும். அதற்கிணங்க, மறுசீரமைப்புச் செய்யப்பட்ட லக்சல நிறுவனத்தின் கீழ் மிகவும் உயர் தரத்திலான நவீன வடிவமைப்புக்களைக் கொண்ட பொருட்கள் பல விற்பனைக்காகக் காட்சிப்படுத்தப்படுவதுடன் பார்ப்போர் மனதைக் கவரக்கூடிய காட்சியறைகளில் மட்பாண்டங்கள், தோற் பொருட்கள், கைத்தறி நெசுவுகள், பற்றிக், புல் உற்பத்திகள் என்பனவும் தற்போதைய சந்தைக்குப் பொருத்தமான கைப்பணிப் பொருட்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இரத்தினக் கற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள், பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை, வாசனைத் திரவியங்கள் என்பனவும் லக்சலவின் வர்த்தகப் பெயரின் கீழ் சந்தைப்படுத்தப்படுகின்றன. இலங்கையின் அன்பளிப்பு மற்றும் ஞாபகார்த்தப் பொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ள ஒரே அரசாங்க நிறுவனமாகவும் பிரதான வர்த்தக நிறுவனமாகவும் உள்நாட்டு, வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் இதயங்களில் இடம்பிடிக்கும் விதத்தில் தேவையான சந்தைப்படுத்தல் செயற்பாடுகளை விரிவுபடுத்தி வாடிக்கையாளர்களை நிறுவனத்தை நோக்கி மென்மேலும் கவர்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## வர்த்தக நாமமிடல் (Branding) மூலம் நிறுவனத்தின் பெயரை சந்தையில் உறுதியடையச் செய்தல்

லக்சல நிறுவனம் தனது விற்பனைக் காட்சியறைகளைத் தற்கால சந்தைகளுக்குப் பொருத்தமான முறையில் மிகவும் உயர் தரத்திற்கு நவீனமயப்படுத்தியுள்ளது. இதன் போது கட்டுபெத்தையில் அமைந்துள்ள காட்சியறையை முழுமையாக நவீனமயப்படுத்தியதுடன் கொழும்பு 07 இல் அமைந்துள்ள தும்முல்லை லக்சல காட்சியறை நுகர்வோரைக் கவரும் விதத்தில் மிகவும் உயர் மட்டத்திற்கு நவீனமயப்படுத்தப்பட்டு லக்சலவின் வர்த்தகப் பெயரின் கீழ் உற்பத்திப் பொருட்களை அறிமுகப்படுத்தி பொருட்களின் காட்சிப்படுத்தலை உயர் தரத்தில் பேணும் நோக்கில் வர்த்தகப் பெயரிட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை இலக்குகளைப் பூர்த்தி செய்ய முடிந்தது.

## உபசரிப்புமிக்க வாடிக்கையாளர் சேவைக்குத் தேவையான முறையில் ஊழியர்களிடம் சிறந்த மனப்பாங்குகளை கட்டியெழுப்புதல்.

நவீன சந்தைக்குப் பொருத்தமான முறையில் செயற்படக்கூடிய ஊழியர் குழாம் ஒன்று லக்சல நிறுவனத்திற்கு அத்தியவசியமாகத் தேவைப்பட்டதனால் 40மூ -60மூ என்ற விகிதத்தில் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான சிறந்த செயற்பாட்டைக்



"2011 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டிருந்த 4,000 வரையான உள்நாட்டு கைப்பணியாளர்களின் எண்ணிக்கை இவ்வருடத்தில் 6,000 வரை அதிகரித்துள்ளது."

# தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

> "... 2011 ஏப்ரல் 29 மற்றும் 2012 நவம்பர் 16 ஆந் திகதி பொது தொழில்முயற்சிகள் குழுவினால் சுட்டிக்கப்பட்ட அவதானிப்புக்களுக்கு இணங்க அனைத்துச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. "

கொண்ட ஊழியர் குழாமொன்றைப் பேணி வருவதற்கு நடவடிக்கை எடுத்க்கப்பட்டது. தேவையான பயிற்சியை வழங்கி ஊக்குவிப்பதன் ஊடாக அவர்களின் வினைத்திறனை மேம்படுத்தி நட்புறவான நுகர்வோர் சேவையை வழங்குவதற்கு அவர்களுக்குத் தூண்டுதல் வழங்கப்பட்டது விற்பனைச் செயற்பாடுகளுடன் தொடர்புபடாத ஊழியர்களுக்கு 2011 ஆம் ஆண்டில் தமது சுய விருப்பத்தின் பேரில் ஓய்வு பெறுவதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டதுடன் அதற்காக இந்நிறுவனம் சுமார் 50 மில்லியன் ரூபாவைச் செலவிட்டது. அது 2012 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. மிகச் சிறப்பான நுகர்வோர் சேவைக்குத் தேவையான அனைத்து புதிய ஆட்சேர்ப்புக்களும் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கிணங்க, சம்பளங்களும் கொடுப்பனவுகளும் அவர்களின் திறமை, வினைத்திறன் மற்றும் பயனுறுதி என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதனால் அது நிறுவனத்தின் அடிப்படைக் குறிக்கோள்களை அடையப்பெறுவதற்குப் பெரிதும் உதவியாக அமைந்துள்ளது.

## உற்பத்திப் பொருள் வகைகளை விரிவுபடுத்துதல்

மீள்கட்டமைப்பின் கீழ் நிறுவனத்தின் செயற்பாடுகளை மட்டுமன்றி அதன் விற்பனைப் பொருட்களின் வகைகளையும் விரிவுபடுத்துவதற்கான பணிகள் தேசிய வடிவமைப்பு நிலையம், தேசிய அருங்கலைகள் பேரவை, மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் வடிவமைப்புத் துறை என்பவற்றுடன் இணைந்து உள்நாட்டு உற்பத்திகளின் தனித்துவத்தைப் பேணி சமகால சந்தைத் தேவைகளுக்கான புதிய நிர்மாணங்களை மிகவும் உயர் தரத்தில் உருவாக்கி சந்தையில் அறிமுகப்படுத்துவதன் ஊடாக இவ் அன்பளிப்பு பொருள் மற்றும் ஞாபகார்த்தப் பொருட் வகைளுக்கு இரத்தினக் கற்கள், தங்க ஆபரணங்கள், தேயிலை, வாசனைத் திரவியங்கள், தோற் பொருட்கள், பீங்கான்

பொருட்கள் என்பவற்றையும் உள்நாட்டு பொய் முகங்களையும் ஏனைய ஞாபகார்த்தப் பொருட்களையும் அறிமுகப்படுத்தியது. அத்துடன் அப்பொருட்களின் விற்பனையை ஊக்குவிப்பதற்காகவும் புதிய வடிவமைப்புக்களை அறிமுகப்படுத்துவதற்காகவும் தனியான அலகு ஒன்று அமைக்கப்பட்டது.மேலும், லக்சல நிறுவனத்தினால் விற்பனை செய்யப்படும் உள்நாட்டு இரத்தினக் கற்கள் மற்றும் தங்க ஆபரணங்களுக்கு அத்தியவசியமான உத்தரவாதச் சான்றிதழ் தேசிய இரத்தினக் கற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகாரசபையுடன் இணைந்து வழங்கப்படுவதனால் உள்நாட்டு வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வென்றதன் மூலம் மேலும் உறுதியடைந்துள்ளது.

## வழங்கல் வலையமைப்பு

இந்நிறுவனத்தின் வழங்கல் வலையமைப்பின் ஊடாகச் சந்தைப்படுத்துவதற்குத் தேவையான அன்பளிப்பு மற்றும் ஞாபகார்த்தப் பொருட்களைக் கொள்வனவு செய்தல், அவற்றுக்கான உற்பத்தித் திட்டங்களைத் தயாரித்தல், தரக் கட்டுப்பாடு, நவீன வடிவமைப்புக்களை வழங்குதல் என்பன இதில் உள்ளடங்கும். 2011 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டிருந்த 4000 வரையான உள்நாட்டு கைப்பணியாளர்களின் எண்ணிக்கை இவ்வருடத்தில் 6000 வரை அதிகரித்துள்ளது. புதிய சந்தை வாய்ப்புக்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் புதிய உற்பத்தியாளர்களுக்கு இத்துறையினுள் நுழைவதற்கு ஊக்குவிப்பு வழங்கப்பட்டதுடன் அவர்களின் தொழில்களின் நிலைபேறான தன்மையும் உறுதிப்படுதப்பட்டது.

## புதிய லக்சல காட்சியறைகளை ஆரம்பித்தல் மற்றும் திறத்தல்

லக்சல நிறுவனம் தனது விற்பனை வலையமைப்பை விரிவுபடுத்தி 2012 ஆம் ஆண்டில் தென்கடுகதிப் பாதையில் வெலிப்பன்னை இடைமாறலின் இருபுறத்திலும் கொழும்பு குதிரைப் பந்தய மைதானத்தில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கட்டடத்திலும் மிகவும் நவீனமயமானும் கவர்சசியானதுமான வாடிக்கையாளர்களுக்கான வசதிகளைக் கொண்ட புதிய காட்சியறையொன்றை நிறுவியதன் மூலம் தனது விற்பனை இலக்குகளை பூர்த்தி செய்வதற்கு நடிவடிக்கை எடுத்தது. அத்துடன் காலியிலுள்ள பழைய காட்சியறைக்குப் பதிலாக நவீன வசதிகளைக் கொண்ட காட்சியறையொன்றின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களின் எண்ணக்கருவொன்றின் அடிப்படையில் உல்லாசப் பயணிகள் அதிகளவில் நடமாடும் பிரதேசங்களில் காட்சியறைகளை ஆரம்பிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதலாவது காட்சியறை கொழும்பு தேசிய நூதனசாலை வளவினுள் நிர்மணிக்கப்பட்டு வருகின்றது. மேலும், தும்முல்லை காட்சியறை நவீனமயப்படுத்தப்பட்டு வாடிக்கையாளர்களுக்குத் தேவையான வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

## வாடிக்கையாளர் சேவைகளை மேம்படுத்துதல்

**விற்பனை நேரங்களை நீடித்தல் :-**

விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கும் நேரத்தை மு.ப. 9.00 - பி.ப :9.00 மணி வரை 365 நாட்கள் எனத் திருத்தி வருடம் முழுவதும் திறந்து வைப்பதன் ஊடாக நுகர்வோருக்குத் தேவையான விதத்தில் செயற்பட்டதன் மூலம் அதிக வருமானத்தைப் பெற முடிந்தது.

### ஊழியர் பயிற்சி மற்றும் புதிய நியமனங்கள்

நுகர்வோரின் தேவைகளை நிறைவேற்றக் கூடியவாறு ஊழியர் குழாத்தினரிடம் சிறந்த மனப்பாங்கினைக் கட்டியெழுப்பும் விதத்தில் பயிற்சிச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க, அவர்கள் நவீன சந்தைப்படுத்தல் உபாய முறைகள் தொடர்பான அறிவையும் வழங்குவதன் மூலம் சர்வதேச தரத்திலான நுகர்வோர் சேவையினை வழங்குதல்.

### தன்னார்வ முறையின் அடிப்படையில் ஓய்வு பெறுதல் (VRS)

சந்தைப்படுத்தலுக்குப் பொருத்தமான புதிய ஊழியர் குழாத்தை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தன்னார்வ முறையின் கீழ் ஓய்வு பெறுவதற்கான திட்டம் 2012 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க, 04 ஊழியர்கள் தமது சுய விருப்பத்தின் பேரில் இளைப்பாறினர். அதற்காக நிறுவனத்தின் சம்பாத்தியத்திலிருந்து 3.2 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டது.

### வெளியாரிடமிருந்து சேவைகளைப் பெறுதல் (Out Source)

நிறுவனத்தின் நிர்வாகப் பிரச்சினைகள், செலவுகள், வீண்விரயம் என்பவற்றைக் குறைப்பதை இலகுபடுத்தும் நோக்கில் போக்குவரத்து, பாதுகாப்பு, துப்புரவு மற்றும் பொதி செய்தல் என்பன போன்ற சில சேவைகளை வெளியாரிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நிறுவனத்தின் தொழிற்பாடுகளுக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் நிபுணத்துவ மற்றும் தேர்ச்சிபெற்ற சேவைகளைப் பெறுவதற்கு இதன் மூலம் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

### இணையத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் விற்பனை வசதிகளைப் பெற்றுக் கொள்ளல் (Online sales facilities)

லக்சல நிறுவனம் தனது பொருட்களை உலகின் எந்தவொரு இடத்திலும் வாழும் நுகர்வோருக்கு இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் ஊடாகக் கொள்வனவு செய்யும் வசதிகளை ஏற்படுத்துவதற்கான இணைய வசதிகளை 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### சிறந்த நிர்வாகம் மற்றும் பொருத்தமான முறைகளின் அமுலாக்கம்

**அ) கணக்காய்வு முகா மைக் குழுக்களை அமைத்தல்**

நிறுவனத்தின் உள்ளக நிர்வாகத்தையும் சோதனைகளையும் முறைப்படி பேணி வருவதற்காக பணிப்பாளர் சபையின் நிறைவேற்று அல்லாத சுயாதீன அங்கத்தவர்கள் 3 பேரைக் கொண்ட சுயாதீனக் குழுவாக கணக்காய்வு முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்ட அதேவேளை இக்குழு நிறுவனத்தின் முக்கியமான தீர்மானங்களைக் கலந்துரையாடி பணிப்பாளர் சபைக்கு தாங்கள் கண்டறிந்தவற்றை வழங்கினர். இக்குழுவின் ஏற்பாட்டாளராக நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வாய்வாளர் கடமையாற்றுகின்றார். இது வரையில் அரசாங்கக் கணக்காய்வாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து கணக்காய்வு கேள்விகளுக்கும் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 2011 ஏப்ரல் 29 மற்றும் 2012 நவம்பர் 16 ஆந் திகதி பொது தொழில்முயற்சிகள் குழுவினால் சுட்டிக்கப்பட்ட அவதானிப்புக்களுக்கு இணங்க அனைத்துச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஆ) புதிய தொழில்நுட்பங்களின் அறிமுகம் - தொழில் வளத் திட்டம் (ERP)**

15 மில்லியன் ரூபா செலவில் நிறுவனத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் ஒருங்கிணைக்கப்பட்ட விதத்தில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பிரதான கம்பனிகளால் நடைமுறைப்படுத்தப்படும் **SAP** எனும் புதிய கணனித் தொகுதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் நிறுவனத்தின் விற்பனை, நிதி, கையிருப்புக் கட்டுப்பாடு, கொள்வனவு ஆகிய அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நிறுவனத்தின் வினைத்திறனையும் பயனுறுதித் தன்மையையும் மேம்படுத்த முடிந்தது.

**இ) 2020 நிறுவனத் திட்டத்தை தயாரித்தல் (Strategic Plan)**

லக்சல நிறுவனத்தை மீள்கட்டமைத்ததன் மூலம் கிடைத்த நடைமுறை அனுபவத்தையும் பயன்களையும் ஒருங்கிணைத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளை ஆய்வு செய்து உலகளாவிய பொருளாதாரத்தில் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்குத் தேவையான உபாயமுறை திட்டமிடல் அடங்கிய நிறுவனத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இது எதிர்வரும் 02 வருடங்களில் நிறுவனத்தினால் அடையப்படும் பெறுபேறுகளை ஆய்வு செய்து 2015-2020 ஆண்டு வரையான காலப் பகுதிக்குத் தேவையான நிறுவனத் திட்டம் தயாரிக்கப்படும். இதன் போது மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு அடிப்படையாகக் கொள்ளப்படும்.மேலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பயனாகிய எமது உள்நாட்டு வழங்குநர்களான கைப்பணிப் பொருள் உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட அன்பளிப்புப் பொருள் மற்றும் ஞாபகார்த்தப் பண்ட வழங்குநர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஒரு அரசாங்க நிறுவனம் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்கத்தின் அடிப்படைக் குறிக்கோளான உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களை அபிவிருத்தி செய்து எமது உள்நாட்டு கைப்பணித் தொழில்முயற்சியாளர்களுக்கு கைகொடுப்பதன் ஊடாக கிராமியப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

### பலமான நிதிச் செயற்பாடுகள்

இவ்வருடத்தினுள் எம்மால் எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளின் பெறுபேறுகளை, எமது நிதிச் செயற்பாடுகளின் ஊடாகவும் பயனுறுதித் தன்மை என்பவற்றின் ஊடாகவும் தெளிவாகக் கண்டு கொள்ள முடியும்.அதாவது விற்பனை வருமானம் 71.5% சதவீதத்தாலும் 210.6 மில்லியன் ரூபாவினாலும் அதிகரித்துள்ளதுடன் இலாபமீட்டும் தன்மை 28 சதவீதத்தால் அதாவது 23 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளதுடன் விற்பனையின் அளவு 48 சதவீதத்தால் அதிகரித்து அதாவது விற்பனை 489,563,350 ரூபாவாகக் காணப்பட்டது.

# தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

### அடையப்பெற்ற பயன்கள்

அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து லக்சல நிறுவனம் மிகவும் புத்தாக்கமிக்க முறையில் நுகர்வோர் நட்புறவான, நிலைபேறான நிதி நிலைமையைக் கொண்ட பயனுறுதி வாய்ந்த நிறுவனமாகப் பரிணமித்துள்ளது. அதன் மூலம் 2012 ஆம் ஆண்டில் லக்சல நிறுவனம் 504.3 மில்லியன் ரூபாவை விற்பனை வருமானமாக உழைத்த அதேவேளை, 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 71.5 சதவீத அதிகரிப்பாகும். இந்த விற்பனை வருமானத்தை உழைத்ததன் மூலம் தேறிய இலாபம் 28 சதவீதத்தால் அதிகரித்து 63 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. அது 2011 ஆம் ஆண்டில் 49 மில்லியன் ரூபாவாகக் காண்ப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் இந்த வெற்றியை அடைவதற்கு எமது உபாயமுறைகள் பெரிதும் உதவியாக அமைந்ததுடன் அதன் மூலம் எமது நிறுவனத்திற்குப் பொருட்களை வழங்குகின்ற நாடு முழுவதிலும் சிதறிக் காணப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தியது மட்டுமன்றி சில காலமாக பொருள் உற்பத்தியிலிருந்து ஒதுங்கியிருந்த தொழில்முயற்சியாளர்கள் பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தூண்டப்பட்டதுடன் 2012 ஆம் ஆண்டின் இறுதியில் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த செயலூக்கம் கொண்ட பொருட்களை வழங்கும் கலைஞர்களின் எண்ணிக்கை 4000 இற்கும் அதிகமாகக் காணப்பட்டதுடன் மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களின் எண்ணிக்கை 6000 வரை அதிகரித்துள்ளது.

மேலும் அதற்காக கைப்பணித் தொழில்முயற்சியாளர்களுக்கான கொடுப்பனவுகளும் பின்வரும் விதத்தில் அதிகரித்துள்ளன.

| வருடம் | ஞாபகார்த்தப் பொருட்கள் மற்றும் கைப்பணிப் படைப்புக்களை கொள்வனவு செய்வதற்காகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் |
|---|---|
| 2011 | ரூபா<br>183,830,429/- |
| 2012 | 316,716,472/- |

### எமது நன்றிகள்

லக்சலவின் சார்பில் முதலில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களுக்கும் எமது நிறுவனம் சொந்தமாகவுள்ள அரசாங்க வளங்கள் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சுக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் கௌரவ தயாஷிறித திசேரா அவர்களுக்கும் அவ் அமைச்சுக்குப் பொறுப்பான பிரதி அமைச்சர் கௌரவ சரத் குணரத்ன அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இந்நிறுவனத்தை சிறந்த நிலைக்குக் கொண்டுவருவதற்கு வழங்கிய வழிகாட்டலுக்காகவும் ஒத்துழைப்புக்காகவும் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களின் சார்பில் அதன் தலைவர் என்ற வகையில் எனது மனமார்ந்த நன்றிகளைத் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், எமது அமைச்சின் செயலாளர் கலாநிதி விலீ கமகே அவர்களின் தொடர்ச்சியான வழிகாட்டல்கள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு, அதேபோன்று நிதி அமைச்சின் செயலாளர், பொதுத் திறைசேரியின் உத்தியோகத்தர்கள், சுற்றுலா ஊக்குவிப்பு அதிகாரசபையின் தலைவர், அரசாங்க வளங்கள் மற்றும் தொழில்முயற்சிகள் அமைச்சின் உத்தியோகத்தர்கள், திறமுறை தொழில்முயற்சி முகாமைத்துவ முகவராண்மை (SEMA) நிறுவனத்தின் தலைவர், உள்ளிட்ட அங்கத்தவர்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் லக்சல பணிப்பாளர் சபையின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் சிரேஷ்ட முகாமைத்துவக் குழுக்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் அவர்கள் வழங்கிய பங்களிப்புக்காகவும் அர்ப்பணிப்புக்களுக்காகவும் நிறுவனத்தின் வளர்ச்சியில் கொண்டிருந்த ஆர்வத்துக்காகவும் இந்நிறுவனத்தை இந்நிலைக்குக் கொண்டு வருவதற்குச் செய்த பங்களிப்புக்களுக்காகவும் எனது மானமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் எமது நிறுவனத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ள வாடிக்கையாளர்களுக்கும் எனது விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இறுதியாக இலங்கையின் கிராமியப் பொருளாதாரத்தைப் பலப்படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கான சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதையும் 2013 ஆம் ஆண்டில் 700 மில்லியன் ரூபா வரை விற்பனை வருமானத்தைப் பெற்று உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வெளிநாட்டுச் செலாவணியை உழைப்பதற்கு லக்சல நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.



அனில் கொஸ்வத்த
*தலைவர் /பிரதம நிறைவேற்று அதிகாரி*

# பணிப்பாளர் சபை

| | |
|---|---|
| திரு. அனில் கொஸ்வத்த | தலைவர் |
| கலாநிதி. நாளக கொடஹேவ | சபை பணிப்பாளர் |
| திருமதி.இரேசா பண்டார | சபை பணிப்பாளர் |
| திரு.தித்த குமாரசிங்க | சபை பணிப்பாளர் |
| திரு.வஜிர விக்கிரமசிங்க | சபை பணிப்பாளர் |
| திரு.டப்.ஏ.டி.ராஜபக்ஸ | சபை பணிப்பாளர் |
| திருமதி.எம்.ஏ.நளினி | சபை பணிப்பாளர் |
| திருமதி.எல்.எம்.ஈ.பெரேரா | சபை பணிப்பாளர்/ பிரதம தொழிற்பாட்டு உத்தியோகத்தர் |

# சிரேஷ்ட முகாமைத்துவ குழு

| | |
|---|---|
| திருமதி எல்.எம்.ஈ.பெரேரா | முகாமைத்துவப் பணிப்பாளர் |
| திருமதி ரோஹினி பெரேரா | நிறைவேற்றுப் பணிப்பாளர் (நிதி) |
| திரு.சீ.என்.தஹநாயக | நிறைவேற்றுப் பணிப்பாளர் (ஆளணி மற்றும் நிர்வாகம்) |
| திரு.ஏ.யூ.டி.பெரேரா | நிறைவேற்றுப் பணிப்பாளர் (செயற்திட்டங்கள்) |
| திரு. எம்.கே.ஜீ.மெண்டிஸ் | ஆலோசகர் (நிதி மற்றும் நிதி முகாமை) |
| திரு.அஜித் பெரேரா | ஆலோசகர் (இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணங்கள்) |
| திரு.ஜே.விக்ரமபால | ஆலோசகர் (நிர்வாகம் மற்றும் மனித வள முகாமை) |
| திரு. கே.டி.டபிய்யு.பெர்னாண்டோ | ஆலோசகர் (விற்பனை.ஂ.சந்தைப்படுத்தல் மற்றும் பயிற்சி) |
| திருமதி தேவிகா அதுகோரள | உதவிப் பணிப்பாளர் (களஞ்சியங்கள்) |
| திரு. கெழும் ஜயவர்தன | சிரேஷ்ட முகாமையாளர் |
| திருமதி வஜிர சமரத்ன | சிரேஷ்ட முகாமையாளர் (கொள்வனவு) |

# நிருவாகம்

நிருவாகப் பிரிவானது நிறுவனத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் அடைவதற்கான மனித வளங்களின் முகாமைக்கும் அவ்வாறே ஏனைய ஆதரவு சேவைகளை வழங்குவதற்கும் பொறுப்பு வாய்ந்ததாகும். மீளாய்வு காலப்பகுதியில் 187 ஊழியர்கள் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களின் விபரம் பின்வருமாறு.

| ஊழியர் வகையீடு | மொத்த தொகை |
|---|---|
| 01. நிறைவேற்று பதவியினர் | 10 |
| 02. விற்பனை மற்றும் அதனுடன் தொடர்புடைய தரங்கள் | 79 |
| 03. ஏனைய பதவியினர் (ஆதரவு சேவைகள்) | 23 |
| 04. ஒப்பந்த பதவியினர் | 75 |
| **மொத்தம்** | **187** |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், வேலைப்படையானது குறைவடைந்துள்ளது.

போட்டி வியாபார சூழலில் வடிவமைக்கப்பட்ட குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால வியாபார திட்டங்களை அமுல்படுத்துவதற்கு, முறையாக பயிற்சியளிக்கப்பட்ட, ஈடுபாடுடைய மற்றும் வினைத்திறன் வாய்ந்த வேலைப்படையானது அவசியமானதாகும். ஆகையால், பயிற்சியளித்தல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதனூடாகவும் கவர்ச்சிகரமான உக்குவிப்பு திட்டங்களை அறிமுகப்படுத்துவதனூடாகவும் ஊழியர்களின் தரம் மற்றும் உற்பத்தித் திறன் என்பவற்றினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மறுசீரமைப்பு செயல்முறையின் கீழ், கழளவநசபைெ மற்றும் பதவியினரின் அத்தியாவசிய வகையிட்டினை ள் வகைப்படுத்துதல் என்பன வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இந்த அங்கீகாரத்திற்கு மேலதிகமாக, புதிய நிறுவன கட்டமைப்புக்கு 207 பதவியணிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய பதவியணியில் 40மூ மானோர் நிரந்தர அடிப்படையிலும் 60மூ மானோர் ஒப்பந்த அடிப்படையிலும் பேணுமாறு மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனால் நிறுவனமானது பொறுப்பினைக் குறைக்கும் வகையில் விற்பனைப் பிரிவுக்கு உத்வேகத்தினை வழங்கக்கூடியதாக இருக்கும்.

முதன்மை சட்டமானது, 1971 ஆம் அண்டின் 38 ஆம் இல. நிதிச்சட்டத்திலுள்ள பொது தொழில்முயற்சிகளுக்கான நிதிக் கட்டுப்பாட்டினையும் சபைக்கு ஏற்புடையதான சட்டத்தின் ஏற்பாடுகளையும் கையாளுகின்றது. சபையினை ஆட்சிப்படுத்துகின்ற சட்டவாக்கத்தின் கீழான தற்போதைய நிலையானது, வழமையாக பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறக்கூடிய அமைச்சுக்குப் பொறுப்புக் கூறக்கூடிய பணிப்பாளர் சபையினால் நிருவகிக்கப்படுகின்றது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியும் சபையின் செயல்நிறைவேற்று அறிக்கையிலும் அவரின் அறிக்கையிலும் பொது முயற்சிகள் மீதான குழுவினால் விளக்கம் கோரப்பட்டுள்ளார். இது தொடர்பில், பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரான அமைச்சின் செயலாளர் மற்றும் தலைவர்.'.பிநிஉ ஆகியோரும் கணக்கீட்டு உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றனர். முகாமைத்துவ குழுவானது, நிறுவனத்தின் வியாபாரம், நிருவாகம், நிதி மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கு தலைவராக.'.பிநிஉ ஆக பொறுப்பு வகிக்கின்றது.

# நிதி அறிக்கையிடல் மீதான
# பணிப்பாளர்களின் பொறுப்பு

சபையின் நிதிக் கூற்றானது, இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாடுகளுக்கமைவாக, 2012 ஆம் ஆண்டுக்கான இந்த அறிக்கையில் சமர்ப்பிக்கப்படுகின்றது. அவர்கள் மேலும் அவர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற நிதிக்கூற்றுக்கள் அன்றைய திகதியிலுள்ளவாறான நடவடிக்கைகளின் உண்மைத் தன்மையினையும் நியாயத்தன்மையினையும் வழங்குவதாக உறுதிப்படுத்துகின்றனர். நிதித் தகவலானது நிதிக் கூற்றுக்களின் நிலையான தன்மையினை வெளிப்படுத்துகின்றது.

பணிப்பாளர் சபையானது, வினைத்திறன் வாய்ந்த உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றினை ஆரம்பித்துள்ளது. இது உள்ளக செவ்வை பார்த்தல்கள் மற்றும் நிதி மற்றும் ஏனைய கட்டுப்பாடுகளுடனான உள்ளக கணக்காய்வு என்பனவற்றினையும் உள்ளடக்குவதுடன் தேவையானதெனக் கருதுகின்றபோது நிதிக்கூற்றுக்களில் தமது கருத்துரைகள பதிவு செய்வதனையும் உள்ளடக்குகின்றது.

கணக்காய்வாளர் நாயகமானவர் சட்டவிதியின் மூலம் கணக்காய்வாளராக நியமிக்கப்படுகின்றார். அவர்கள், பணிப்பாளர் சபையினால் சமர்ப்பிக்கப்படும் நிதிக் கூற்றுக்கள், அவ்வாறே பணிப்பாளர் சபை கூட்டத்தின் அனைத்து ஆதரவு நிதி பதிவேட்டு குறிப்புக்கள் மற்றும் கணக்காய்வாளர் அறிக்கையின் 45 ஆம் பக்கத்தில் சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கையில் பிரசுரிக்கப்படும் அவர்களின் கருத்துரைகள் என்பவற்றினை கணக்காய்வு செய்துள்ளார்கள்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி
**இலங்கை கைப்பணிப்பொருட்கள் சபை - லக்சல**

**எல்.எம்.ஈ.பெரேரா**
*சபை செயலாளர்*

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அறிக்கை

இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபையின் (லக்சல) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது, 2003 ஜுன் 2 ஆம் திகதிய பொது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் நல்லாட்சிக்கான வழிகாட்டுதல்களுக்கமைவாகவும் அதனைத் தொடர்ந்து பயனுறுதியினை விரிவாக்கும் நோக்குடன் பொது முயற்சிகள் குழுக்களை வலுப்படுத்துவது தொடர்பான ீநுனு 55 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைவாகவும் உள்ளக கட்டுப்பாடு மற்றும் அறிக்கையிடலுடன் தொடர்புடைய நடைமுறைகளின் ஒருமைப்பாட்டினை உதிப்படுத்தம் நோக்குடனும் தாபிக்கப்பட்டது.

## குழுவின் நோக்கெல்லை

குழுவின் நோக்கெல்லையானது பின்வருவனவற்றினை உள்ளடக்ககின்றது.

1. உள்ளக கணக்காய்வின் பொறுப்புக்கள் மற்றும் நோக்கெல்லையினைத் தீர்மானித்தல் மற்றும் வருடாந்த கணக்காய்வு திட்டங்கள் மற்றும் வேலை நிகழ்ச்சித்திட்டங்களினை மீளாய்வு செய்தல்
2. உள்ளக கணக்காய்வு அறிக்கைளின் அடிப்படையில் கணக்கீடு நிதி மற்றும் தொழிற்பாட்டு விடயங்களை உள்ளடக்குகின்ற உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்
3. வெளியக கணக்காய்வு அறிக்கைகளின் அறிக்கையினை மீளாய்வு செய்தலும் இரட்டைப் பதிவினை தவிர்ப்பதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகளினை எடுத்தல்
4. வரவு செலவுத்த திட்டம், அறிக்கைகளை மீளாய்வு செய்தல் மற்றும் பயனுறுதி வாய்ந்த செலவு என்பன தொடர்பில் மதிப்பீடு செய்தல் செயல்நிறைவேற்றம் மற்றும் டிலக்குகளை அடைதல் உள்ளடங்கலான நிதிக்கூற்றுக்களின் ஆரம்ப கட்ட மீளாய்வு
5. கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக வருடாந்த நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்தலும் இறுதிக் கணக்குகள் வருடாந்த அறிக்கைகள் போன்றவற்றினை உரிய நேரத்தில் சமர்ப்பிப்பதனை உறுதி செய்தல்
6. உள்ளக கணக்காய்வாளர்கள் மற்றும் வெளியக கணக்காய்வாளர்களுக்கிடையே இணைப்பினை ஏற்படுத்துதல்
7. நியதிச்சட்ட மற்றும் ஏனைய சட்டவிதிகள் மற்றும் ஒழுங்கவிதிகளுடன் பரிச்சயமான சிரேஷ்ட முகாமைத்துவ பதவியினர் உள்ளதை உறுதி செய்தல்
8. திறைசேரி சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய பணிப்புரைகளுடன் இணங்கியவாறான தேவைப்பாடுகள் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்
9. பதவியினர் நோக்கம்இ சேதாரம் ஏற்படாமல் தடுத்தல் மற்றும் ஊழல் போன்றவற்றுடன் தொடர்புடைய விடயங்களை மீளாய்வு செய்தலும் குறைந்த செலவில் நிறுவனத்தினை உருவாக்குதலும்
10. நியதிச்சட்ட மற்றும் ஏனைய சட்டவிதிகள் மற்றும் ஒழுங்கவிதிகளினூடாக இணக்கத்தினை மீளாய்வு செய்தல்
11. உள்ளக கணக்காய்வாளர்கள் அறிக்கையினை மீளாய்வு செய்தலும் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பில் உடனடி எடுக்கப்படுவதனை உறுதி செய்தலும்
12. பொது தொழில் முயற்சிகள் மீதான குழவின் பரிந்துரைகளின் அமலாக்கத்தினை மீளாய்வு செய்தல்
13. வருடாந்த பெறுகைகள் திட்டம், செயல்திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த திட்டத்தினை மீளாய்வு செய்தல்

## குழுவின் உள்ளடக்கம்

குணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழவானது மூன்று நிறைவேற்று தரமல்லா சபை உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

- திருமதி.இரேசா பண்டார - திறைசேரி பிரதிநிதியும் கணக்காய்வு குழவின் தலைவரும்
- திரு.ஏ.பி.ஜி. கித்சிறி - மேலதிக செயலாளர், கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு
- திரு.தமித்த குமாரசிங்க - பொதுப் பயன்பாடகள் ஆணைக்குழவின் பணிப்பாளர் நாயகம்

உள்ளக கணக்காய்வளரானவர் குழுவின் கூட்ட அறிவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். உறுப்பினர்கள் தமது கடமைகளை சுதந்திரமாகவும் தொழில்சார் தகைமையுடனும் நிறைவேற்றுவதற்கும் விடயங்களை கலந்துரையாடுவதற்கும் தேவையான நிதிசார் அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற கூட்டங்களும் செயற்பாடுகளும்

மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில், குழுவானது நான்கு தடவைகள் கூடியுள்ளது.

| கூட்ட திகதி | வரவு ஆம் (ஆ) இல்லை (இ) குறித்த ஆண்டில் நடாத்தப்பட்டது | சமுகமளித்தோர் |
|---|---|---|
| 2012/03/06 | ஆ | ஆ |
| 2012/05/10 | ஆ | ஆ |
| 2012/06/15 | ஆ | ஆ |
| 2012/11/08 | ஆ | ஆ |

குறித்த ஆண்டு காலப்பகுதியில் குழவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான நடவடிக்கைகள் பின்வருமாறு.

1. வலுப்படுத்தலினை உறுதிப்படுத்தவதற்கு தற்போதிருக்கும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்வு செய்தல், தொழிற்பாடுகளுக்கெதிராக திறமையான உள்ளக கட்டுப்பாட்டு முறைகள் அமுல்படுத்துத்தப்பட்டதுடன் குறைபாடுகளை நீக்குவதற்குத் தேவையான பணிப்புரைகளும் வழங்கப்பட்டன.

2. கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட் விசாரணைகளை மீளாய்வு செய்தலும் சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டள்ளதை உறுதி செய்தலும் தேவையான நடவடிக்கைக்காக பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டு வருதலும்.

3. உள்ளக கணக்காய்வு தொழிற்பாடுகளை மீளாய்வு செய்யப்பட்டதுடன் புதிய விடயங்களை உள்ளடக்கும் வகையில் பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

4. புணிப்புரைகள் மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியவாறு நடைமுறைப்படுத்தப்பட்ட தொழிற்பாட்டு நடைமுறைகளை மீளாய்வ செய்தலும் உறுதிப்படுத்துதலும்.

5. வெளியக கணக்காய்வு அறிக்கைகளின் அறிக்கையினை மீளாய்வு செய்தலும் இரட்டைப் பதிவினை தவிர்ப்பதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகளினை எடுத்தல்

6. பொது தொழில் முயற்சிகளுக்கான குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுவதனை கண்காணித்தமை

குழுவின் செயலாளராக கடமையாற்றும் உள்ளக கணக்காய்வாளரின் அழைப்பின் பேரில் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் நிதிப் பணிப்பாளர் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். குறித்த ஆண்டு காலப்பகுதியில், உள்ளக கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம் தொடர்பில் மீளாய்வு செய்வதன் மூலம் அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் குழுவானது சபைக்கு உதவியளித்தள்ளது.

இதற்கும் மேலாக, கணக்காய்வு முகாமைத்துவ குழவானது உரிமையின் உள்ளக கட்டுப்பாடகளை வலுப்படுத்தவதற்கான பங்களிப்பினை வழங்கும் கண்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அவதானங்களுக்கான மெச்சுதலினை பதிவு செய்ய விரும்புகின்றது.

இரேசா பண்டார
*தலைவர், கணக்காய்வு குழு*
லக்சல



# நிதிக் கூற்றுக்கள்



# நிதிசார் மீளாய்வு

2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | ரூபா |
|---|---|
| புரள்வு | 504,317,546 |
| ஏனைய வருமானம் | 23,263,743 |
| ஆண்டுக்கான மொத்த இலாபம் | 295,153,937 |
| ஆண்டுக்கான தேறிய இலாபம்/ (நட்டம்) | 63,189,722 |
| | |
| மொத்த சொத்துக்கள் | 1,293,676,583 |
| மொத்த உரிமை | 584,647,091 |
| மொத்த பொறுப்புக்கள் | 709,029,492 |
| மொத்த இலாப விகிதம் | 58 |
| மேநதலைச் செலவு விகிதம் | 48 |
| தேறிய இலாப விகிதம் | 12 |
| | |
| நடைமுறை விகிதம் (தடவைகள்) | 1 |
| உரிமை மீதான திரும்புதல்கள் மூ | 0 |

# நிதி நிலைமைக் கூற்று

2013 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறானது

| | லக்சல காட்சியறைகள் | | | காட்சியறைகள் | கைப்பணிப் பொருட் பயிற்சி | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2011 | 1 ஜன 2011 | 2012 | 2012 | மொத்தம் 2012 | மொத்தம் 2011 | மொத்தம் 2010 |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| சொத்துக்கள் | | | | | | | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் இயந்திரம் | 712,203,239 | 226,482,684 | 169,400,402 | 63,031,672 | 46,298,422 | 821,533,333 | 335,733,113 | 278,650,831 |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 712,203,239 | 226,482,684 | 169,400,402 | 63,031,672 | 46,298,422 | 821,533,333 | 335,733,113 | 278,650,831 |
| பொருட் பட்டியல்கள் | 242,220,919 | 128,133,297 | 55,260,106 | 3,932,531 | 246,153,450 | 131,021,348 | 57,238,986 | |
| வர்த்தகப் படுகடன்கள் மற்றும் ஏனைய | 125,764,536 | 58,426,315 | 40,742,952 | 40,987,541 | 31,320,139 | 198,072,216 | 131,994,778 | 113,264,722 |
| காசு மற்றும் அதற்குச் சமனானவைகள் | 24,990,500 | 17,806,115 | 8,932,184 | 2,895,907 | 31,177 | 27,917,584 | 22,711,201 | 9,162,889 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 392,975,955 | 204,365,727 | 104,935,242 | 47,815,979 | 31,351,316 | 472,143,250 | 285,727,327 | 179,666,597 |
| மொத்தச் சொத்துக்கள் | 1,105,179,194 | 430,848,411 | 274,335,644 | 110,847,651 | 77,649,738 | 1,293,676,583 | 621,460,440 | 458,317,428 |
| உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள் | | | | | | | | |
| மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் | | | | | | | | |
| குறிப்பிடப்பட்ட மூலதனம் | 73,628,878 | 73,628,878 | 73,628,878 | - | 73,628,878 | 73,628,878 | 73,628,878 | |
| மூலதன ஒதுக்கங்கள் | 510,806 | 510,806 | 510,806 | - | 98,973 | 609,779 | 609,779 | 609,779 |
| மீள்பெறுமதியிடல் ஒதுக்கங்கள் | 434,903,833 | 134,175,116 | 134,175,116 | 21,164,824 | 9,086,454 | 465,155,111 | 164,426,394 | 164,426,394 |
| கிடைக்கப்பெற்ற மானியங்கள் | 12,000,000 | 12,000,000 | 12,000,000 | 41,951,172 | 56,052,275 | 110,003,447 | 110,003,447 | 110,003,447 |
| இலாபம் மற்றும் நட்டம் | (6,542,556) | (66,172,570) | (117,841,224) | (40,682,598) | (17,524,970) | (64,750,124) | (127,939,847) | (177,569,020) |
| மொத்த மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் | 514,500,961 | 154,142,230 | 102,473,576 | 22,433,398 | 47,712,732 | 584,647,091 | 220,728,651 | 171,099,478 |
| ஓய்வூதியப் பயன் கடப்பாடுகள் | 28,417,509 | 28,119,582 | 29,585,421 | | | 28,417,509 | 28,119,582 | 42,164,616 |
| தவறுகை வரிப் பொறுப்புக்கள் | 11,517,706 | 1,517,706 | 1,517,706 | | 12,345,384 | 23,863,090 | 13,863,090 | 1,517,706 |
| தவறுகை வருமானம் | 90,000,000 | | | | | 90,000,000 | - | |
| கடன் | 158,844,548 | 137,605,228 | 28,944,089 | 2,035,135 | 160,879,683 | 160,789,683 | 139,937,710 | 30,978,224 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | 288,779,763 | 167,242,516 | 60,047,216 | 2,035,135 | 12,345,384 | 303,160,282 | 181,920,388 | 74,661,548 |
| கடன்வழங்குநர்கள் மற்றும் அட்டுறுக்கள் | 165,502,235 | 90,082,250 | 104,827,253 | 86,260,713 | 14,655,594 | 266,418,542 | 187,850,166 | 195,901,204 |
| இலங்கை வங்கி கடன் - குறுகிய காலம் | 93,937,218 | 19,375,000 | | | | 93,937,218 | 19,375,000 | |
| வங்கி மேலதிகப்பற்று | 42,459,017 | 6,415 | 6,987,599 | 118,405 | 2,936,028 | 45,513,450 | 11,586,235 | 16,655,198 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 301,898,470 | 109,463,665 | 111,814,852 | 86,379,118 | 17,591,622 | 405,869,210 | 218,811,401 | 212,556,402 |
| மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள் | 1,105,179,194 | 430,848,411 | 274,335,644 | 110,847,651 | 77,649,738 | 1,293,676,583 | 621,460,440 | 458,317,428 |

இந்நிதிக் கூற்றுக்கள் இலங்கை நிதிப் பிரமாண நியமங்களுக்கு.'.இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

..........................................

**திருமதி. எஸ்.ஆர்.எம். பெரேரா**
பிரதான நிதி உத்தியோகத்தர்

..........................................

**திரு. அனில் கொஸ்வத்தை**
தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி

# முழுமையான வருமானக் கூற்று

2013 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறானது

| | லக்சல காட்சியறைகள் | | | செயற்திட்டங்கள் | மொத்தம் | மொத்தம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2011 | 2010 | 2012 | 2012 | 2011 | 2010 |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வருமானம் | | | | | | | |
| உள்நாட்டு | 489,564,350 | 274,893,093 | 206,027,536 | 14,753,195 | 504,317,546 | 292,203,148 | 224,292,147 |
| ஏற்றுமதி | | 1,475,428 | 1,428,886 | | | 1,475,428 | 1,428,886 |
| | 489,564,350 | 276,368,521 | 207,456,422 | 14,753,195 | 504,317,546 | 293,678,576 | 225,721,033 |
| விற்பனைகளுக்கான செலவு | (202,628,850) | (110,957,238) | (105,150,248) | (6,534,758) | (209,163,608) | (127,735,091) | (119,864,043) |
| மொத்த இலாபம்/(நட்டம்) | 286,935,500 | 165,411,283 | 102,306,174 | 8,218,437 | 295,153,937 | 165,943,485 | 105,856,990 |
| பொறியியல் சேவைகள் | | | | | | | 15,566,727 |
| கிடைக்கப்பெற்ற மானியங்கள் | 10,000,000 | | 15,566,727 | | 10,000,000 | | |
| வேறு வருமானங்கள் | 7,656,544 | 22,740,963 | 2,584,366 | 5,607,199 | 13,263,743 | 22,828,430 | 2,742,693 |
| நிர்வாகச் செலவுகள் | (188,578,972) | (122,081,983) | (110,837,100) | (3,928,951) | (192,507,923) | (124,718,493) | (112,387,459) |
| விநியோகச் செலவு | (23,271,225) | (4,263,820) | (2,067,210) | (6,316,439) | (29,587,664) | (4,289,972) | (2,185,182) |
| ஏற்றுமதிச் செலவுகள் | - | (136,554) | (273,624) | - | - | (136,554) | (273,624) |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் மூலமான பெறுபேறுகள் | 92,741,847 | 61,669,889 | 7,279,333 | 3,550,246 | 96,322,093 | 59,626,896 | 9,320,145 |
| நிதிச் செலவு | (23,111,834) | (9,295,292) | (1,219,238) | (20,537) | (23,132,371) | (9,310,490) | (1,225,312) |
| வரிக்கு முன்னரான இலாபம் | 69,630,013 | 52,374,597 | 6,060,095 | 3,559,709 | 73,189,722 | 50,316,406 | 8,094,833 |
| வரிச் செலவுகள் | (10,000,000) | (687,233) | (2,060,275) | | (10,000,000) | (687,233) | (2,060,275) |
| இவ் ஆண்டுக்கான இலாபங்கள் | 59,630,013 | 51,687,364 | 3,999,820 | 3,559,709 | 63,189,722 | 49,629,173 | 6,034,558 |

# நிதி நிலைமை தொடர்பான அறிக்கை

2013 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறானது

| | | லக்சல காட்சியறைகள் | | |
|---|---|---|---|---|
| | குறிப்பு | 2012 | 2011 | 1 ஜன 2011 |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| சொத்துக்கள் | | | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் இயந்திரம் | 3.02 | 712,203,239 | 226,482,684 | 169,400,402 |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | 712,203,239 | 226,482,684 | 169,400,402 |
| வர்த்தகப் படுகடனாளர்கள் மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவை | 3.06 | 125,764,536 | 58,426,315 | 40,742,952 |
| பொருட் பட்டியல்கள் | 3.07 | 242,220,919 | 128,133,297 | 55,260,106 |
| காசு மற்றும் அதற்குச் சமனானவைகள் | 3.08 | 24,990,500 | 17,806,115 | 8,932,184 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | 392,975,955 | 204,365,727 | 104,935,242 |
| மொத்தச் சொத்துக்கள் | | 1,105,179,194 | 430,848,411 | 274,335,644 |
| உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள் | | | | |
| மூலதன ஒதுக்கங்கள் | | | | |
| குறிப்பிடப்பட்ட மூலதனம் | | 73,628,878 | 73,628,878 | 73,628,878 |
| மூலதன ஒதுக்கங்கள் | | 510,806 | 510,806 | 510,806 |
| மீள்பெறுமதியிடல் ஒதுக்கங்கள் | | 434,903,833 | 134,175,116 | 134,175,116 |
| கிடைக்கப்பெற்ற மானியங்கள் | | 12,000,000 | 12,000,000 | 12,000,000 |
| இலாபம் மற்றும் நட்டம் | | (6,542,556) | (66,172,570) | (117,841,224) |
| மொத்த மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள் | | 514,500,961 | 154,142,230 | 102,473,576 |
| ஓய்வூதியப் பயன் கடப்பாடுகள் | | 28,417,509 | 28,119,582 | 29,585,421 |
| தவறுகை வரிப் பொறுப்புக்கள் | | 11,517,706 | 1,517,706 | 1,517,706 |
| தவறுகை வருமானம் | | 90,000,000 | | |
| கடன் | | 158,844,548 | 137,605,228 | 28,944,089 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | | 288,779,763 | 167,242,516 | 60,047,216 |
| கடன்வழங்குநர்கள் மற்றும் அட்டுறுக்கள் | 3.09 | 165,502,235 | 90,082,250 | 104,827,253 |
| இலங்கை வங்கி கடன் - குறுகிய காலம் | | 93,937,218 | 19,375,000 | - |
| வங்கி மேலதிகப்பற்று | 3.10 | 42,459,017 | 6,415 | 6,987,599 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | 301,898,470 | 109,463,665 | 111,814,852 |
| மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள் | | 1,105,179,194 | 430,848,411 | 274,335,644 |

# முழுமையான வருமானம் தொடர்பான அறிக்கை

டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான

| | | லக்சல காட்சியறைகள் | | |
|---|---|---|---|---|
| | குறிப்பு | 2012 | 2011 | 2010 |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| வருமானம் | | | | |
| உள்நாட்டு | 6.01 | 489,564,350 | 274,893,093 | 206,027,536 |
| ஏற்றுமதி | | | 1,475,428 | 1,428,886 |
| | | 489,564,350 | 276,368,521 | 207,456,422 |
| விற்பனைகளுக்கான செலவு | 6.01.01 | (202,628,850) | (110,957,238) | (105,150,248) |
| மொத்த இலாபம்.'.(நட்டம்) | | 286,935,500 | 165,411,283 | 102,306,174 |
| பொறியியல் சேவைகள் | | | | 15,566,727 |
| கிடைக்கப்பெற்ற மானியங்கள் | | 10,000,000 | | |
| வேறு வருமானங்கள் | 6.02 | 7,656,544 | 22,740,963 | 2,584,366 |
| நிர்வாகச் செலவுகள் | 6.03 | (188,578,972) | (122,081,983) | (110,837,100) |
| விநியோகச் செலவு | 6.03.01 | (23,271,225) | (4,263,820) | (2,067,210) |
| ஏற்றுமதிச் செலவுகள் | 6.03.02 | - | (136,554) | (273,624) |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் மூலமான பெறுபேறுகள் | | 92,741,847 | 61,669,889 | 7,279,333 |
| நிதிச் செலவு | 6.03.03 | (23,111,834) | (9,295,292) | (1,219,238) |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 69,630,014 | 52,374,597 | 6,060,095 |
| வரிச் செலவுகள் | | (10,000,000) | (687,233) | (2,060,275) |
| இவ் ஆண்டுக்கான இலாபங்கள் | | 59,630,013 | 51,687,364 | 3,999,820 |

# உற்பத்திக் கணக்கு - செயற்திட்டப் பிரிவு

2012 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான

| | குறிப்பு | 2012<br>ரூபா | 2011<br>ரூபா | 2010<br>ரூபா |
|---|---|---|---|---|
| மூலப் பொருட்கள் | | | | |
| 2012.01.01 ஆந் திகதியில் உள்ளவாறான கையிருப்பு | | 1,127,174 | 1,013,273 | 1,006,549 |
| கொள்வனவுகள் | | 5,193,793 | 11,320,222 | 9,080,869 |
| | | 6,320,967 | 12,333,495 | 10,087,418 |
| கழிக்க | | | | |
| 2013.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான கையிருப்பு | | (2,281,781) | (1,127,174) | (1,013,273) |
| | | 4,039,186 | 11,206,321 | 9,074,145 |
| கூட்டுக | | | | |
| நேரடிச் செலவுகள் | | 62,796 | 486,325 | 664,414 |
| ஒப்பந்தத் தொழிலாளர் | | 1,508,597 | 795,692 | |
| அடிப்படைச் செலவு | | 4,101,982 | 13,201,243 | 10,534,251 |
| கூட்டுக | | | | |
| தொழிற்சாலைச் செலவுகள் | 10 | 2,651,712 | 4,569,980 | 3,906,945 |
| | | 6,753,693 | 17,771,223 | 14,441,196 |
| கூட்டுக: 2012.01.01 ஆந் திகதியில் உள்ளவாறான றுஜீ | | 1,222,940 | | |
| கழிக்க: 2012.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான றுஜீ | | (626,850) | (1,222,940) | |
| | | 7,349,783 | 16,548,283 | 14,441,196 |

# நிதி நிலைமை தொடர்பான அறிக்கை

2013 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான

| செயற்திட்டம் | குறிப்பு | 2012<br>ரூபா | 2011<br>ரூபா | 2010<br>ரூபா |
|---|---|---|---|---|
| சொத்துக்கள் | | | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் இயந்திரம் | | 63,031,672 | 62,952,007 | 62,952,007 |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | 63,031,672 | 62,952,007 | 62,952,007 |
| | | | | |
| பொருட்பட்டியல் | 05 | 3,932,531 | 2,888,051 | 1,978,880 |
| வர்த்தகப் படுகடனாளர்கள் மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவை | 06 | 40,987,541 | 42,248,324 | 41,201,631 |
| காசு மற்றும் அதற்குச் சமனானவைகள் | 07 | 2,895,907 | 4,873,909 | 199,528 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | 47,815,979 | 50,010,284 | 43,380,039 |
| மொத்தச் சொத்துக்கள் | | 110,847,651 | 112,962,291 | 106,332,046 |
| | | | | |
| உரிமையாண்மை | | | | |
| மீள்பெறுமதியிடல் ஒதுக்கங்கள் | | 21,164,824 | 21,164,824 | 21,164,824 |
| கிடைக்கப்பெற்ற மானியங்கள் | | 41,951,172 | 41,951,172 | 41,951,172 |
| நிறுத்திவைக்கப்பட்ட சம்பாத்தியங்கள் | | (40,682,598) | (44,242,307) | (42,202,826) |
| மொத்த உரிமையாண்மை | | 22,433,398 | 18,873,689 | 20,913,170 |
| | | | | |
| ஏனைய கடன்கொடுத்தோர் | | 2,035,135 | 2,332,488 | 2,268,948 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | | 2,035,135 | 2,332,488 | 2,268,948 |
| | | | | |
| கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறுக்கள் | 08 | 86,260,713 | 83,112,322 | 76,418,357 |
| வங்கி மேலதிகப்பற்று | 09 | 118,405 | 8,643,792 | 6,731,571 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | 86,379,118 | 91,756,114 | 83,149,928 |
| மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள் | | 110,847,651 | 112,962,291 | 106,332,046 |

# முழுமையான வருமானக் கூற்று செயற்திட்டம்

2012 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்துக்கான

| செயற்திட்டம் | குறிப்பு | 2012<br>ரூபா | 2011<br>ரூபா | 2010<br>ரூபா |
|---|---|---|---|---|
| வருமானம் | | 14,753,195 | 17,310,055 | 18,264,611 |
| விற்பனைகளுக்கான செலவு | 01 | (6,534,758) | (16,777,853) | (14,713,795) |
| மொத்த இலாபம்/(நட்டம்) | | 8,218,437 | 532,202 | 3,550,816 |
| வேறு வருமானங்கள் | | 5,607,199 | 87,467 | 158,327 |
| நிர்வாகச் செலவுகள் | 02 | (3,928,951) | (2,516,660) | (1,530,349) |
| விநியோகச் செலவு | 03 | (6,316,439) | (146,002) | (137,982) |
| நிதிச் செலவு | 04 | (20,537) | (15,198) | (6,074) |
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் மூலமான பெறுபேறுகள் | | 3,559,709 | (2,058,191) | 2,034,738 |
| இவ் ஆண்டுக்கான இலாபங்கள் | | 3,559,709 | (2,058,191) | 2,034,738 |

# காசுப் பாய்ச்சல் கூற்று

2012 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்துக்கானது

| | 2012<br>ரூபா | 2011<br>ரூபா |
|---|---|---|
| தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் மூலமான காசுப் பாய்ச்சல் | | |
| வரிச் செலவுகளுக்குப் பின்னரான தேறிய இலாபம் - லக்சல | 59,630,013 | 51,687,364 |
| வரிச் செலவுகளுக்குப் பின்னரான தேறிய இலாபம்.்.நட்டம் - செயற்திட்டம் | 3,559,709 | (2,058,191) |
| வரிச் செலவுகளுக்குப் பின்னரான தேறிய இலாபம் | 63,189,722 | 49,629,173 |
| செம்மையாக்கங்கள் | | |
| பெறுமானத்தேய்வு | 4,988,976 | 2,613,116 |
| தவறுகையிலுள்ள வருமானம் வாடகை மற்றும் மீள்பெறுமதி மதிப்பீடு | 50,291,073 | |
| செயற்பாடு மூலதன மாற்றங்களுக்கு தொழிற்பாட்டு இலாபம;/ நட்டம் | 118,469,771 | 52,242,289 |
| மாற்றங்கள் | | |
| பொருட் பட்டியல்கள் | (115,132,102) | (73,782,362) |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவை | (57,194,544) | (18,730,056) |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுக்க வேண்டியவைகள் | 175,487,593 | 118,582,802 |
| | 121,630,718 | 78,312,673 |
| முதலீட்டுச் செயற்பாடுகள் மூலமான காசுப் பாய்ச்சல் | | |
| முதலீடுகளின் காசாக்கம் | 6,000,000 | 6,000,000 |
| சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (156,351,550) | (59,695,398) |
| முதலிட்டுச் செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்கள் | (150,351,550) | (53,695,398) |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/(வீழ்ச்சி) | (28,720,832) | 24,617,275 |
96,000 (ஆ) பணிப்பாளர் சபைக்காக திறைசேரியின் சார்பில் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையின் பெண் உத்தியோகத்தர் 2012 நவம்பர் 30 ஆந் திகதி முதல் 2013 யூலை 01 ஆந் திகதி வரை பிரசவ விடுமுறையினைப் பெற்றிருக்கையில் பணிப்பாளர் சபை மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் பங்கு பற்றியமைக்காக படிகளாக ரூபா 96,000 செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், பிரசவ விடுமுறையில் கடமைகளிலிருந்து விலகி யிருக்கையில் ஏனைய உத்தியோபூர்வ பணிகளை நிறைவேற்ற முடியாத போதிலும், அதற்காக படியினைப் பெற்றுக்கொள்ளல் முறையற்றதாகும் என்பது பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் தாபன விதிப் பணிப்பாளரின் 2013 யூன் 19 ஆந் திகதிய EST-7/LEAVE/03/3180 (1) ஆம் இலக்க கடிதத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

144,000 (இ) (i) தலைவர்/பிரதான நிறைவேற்று உத்தி யோகத்தராக பணியாற்றியவாறு மாதாந்தம் சம்பளம்/ படிகளைப் பெற்றுவருகையில் பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பங்குபற்றியமைக்காக படியினைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்தற்றவராயினும் அதனைக் கருத்திற் கொள்ளாது ரூபா 16,000 வீதம் ரூபா 144,000 படியினைப் பெற்றிருந்தார்

144,000 (ii) பணிப்பாளர் சபையின் உறுப்பினரல்லாத சபையின் முகாமைத்துவ பெண் பணிப்பாளருக்கு பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் பங்குபற்றியமைக்காக சுற்றறிக்கைக்கு முரணாக 16,000 வீதம் ரூபா 144,000 செலுத்தப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (vi) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது வியாபாரச் சுற்றறிக்கை<br>8.3.8 ஆம் பந்தி | 4,279,050 | அமைச்சரவையின் முன்னங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாது சபையால் பல்வேறு நிறுவனங்களிற்கும் நபர்களுக்கும் ரூபா 4,279,050 கூட்டுத்தொகையான காசு அன்பளிப்புகளும் அன்பளிப்புகளும் செலுத்தப்பட்டிருந்தன. |
| 8.3.9 ஆம் பந்தி | 181,009 | வரிசை அமைச்சால் இலங்கை மன்றக் கல்லூரிக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 181,009 ஆன தொகை சபையால் செலுத்தப்பட்டி ருந்தது. |
| (vii) PE1/000/6 Allow Vol – II (Temporary) ஆம் இலக்க 1998 யூன் 05 ஆந் திகதிய அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை | 2,310,000 | சபைத் தலைவரின் உபசாரச் செலவினங்களை மாத்திரம் மீள்நிரப்ப முடியுமாயினும் அதற்கு முரணாக தலைவரிற்கு/பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு மாதத்திற்கு ரூபா 150,000 வீதம் உபசாரச் செலவினமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், 04 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 20,000 ரூபா - 7,500 வீதம் மாதாந்த உபசாரப் படி செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி மீளாய்வாண்டில் முறையற்ற விதத்தில் செலுத்தப்பட்டிருந்த உபசாரப் படி ரூபா 2,310,000 ஆகும். |
| (vii) 2008 ஒக்தோபர் 28 ஆந் திகதிய பீஈடீ 50 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை | 1,800,000 | (அ) கூட்டுத்தாபனம் மற்றும் சபைகளின் தலைவருக்கு உத்தியோகபூர்வ வாகனத்துடன் மாதமொன்றிற்கு 220 லீற்றர் பெற்றோல் அல்லது சபைக்கு உரித்தான வாகனமொன்றை பயன்படுத்தாதிருப்பின் எரிபொருளுக்குச் சமமான மாதாந்த படியொன்றுடன் அவரது வாகனத்திற்கு ரூபா 30,000 படியொன்று உரித்தான போதிலும், அதற்கு முரணாக தலைவர்/பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக மீளாய்வாண்டில் மாதத்திற்கு ரூபா 150,000 வீதம் ரூபா 1,800,000 தொகையொன்றை பிரயாணப் படியாக பெற்றுக் கொண்டிருந்தார் |
| | 3,382,650 | (ஆ) மேலும், மேற்படி சுற்றறிக்கைக்கு முரணாக 30 உத்தியோகத்தர்களுக்கு பயணப் படியாக |

| | |
|---|---|
| | மாதத்திற்கு ரூபா - 7,500 முதல் ரூபா 20,000 வரையான வீச்சிலமைந்த படியொன்று மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு செலுத்தப்பட்ட படிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,382,650 ஆகும். |
| (ஈ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவை | |
| (i) 2.7.5 ஆம் வழிகாட்டல் | சபைக்காக அமைச்சின் செயலாளரினால் கொள்வனவுச் சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக பணிப்பாளர் சபையால் பெயர் குறிப்பிடப்பட்ட கொள்வனவுச் சபையொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதன் உறுப்பினர்களாக தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர், நிறைவேற்றுப் பணிப்பாளர் (நிதி) மற்றும் செயற்திட்டப் பணிப்பாளர் போன்ற சபையின் உத்தியோகத்தர்கள் காணப்பட்டனர். |
| (ii) 4.3 ஆம் வழிகாட்டல் | ரூபா 141,073,130 பெறுமதி கொண்ட நிர்மாண ஒப்பந்தங்களிற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 5.4.4 ஆம் வழிகாட்டல் | ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய பிணையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஒப்பந்தத் தொகையில் ஆகக்கூடியதாக 20 சதவீத தொகையை முற்பணமாக செலுத்த முடியுமாயினும், சபையினால் முற்பணங்களை செலுத்தும் எல்லையிலிருந்து விலகி உரிய பிணைகளைப் பெற்றுக்கொள்ளாது ஒப்பந்தகாரின் கோரிக்கையின் மீது வரையறையின்றி முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. அவை ஒப்பந்தப் பெறுமதியில் 82 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை காணப்பட்டது. |
| (iv) 5.4.6 ஆம் வழிகாட்டல் | ஒப்பந்தகாரருக்குச் செலுத்தவேண்டிய சகல கொடுப்பனவுகளிலிருந்தும் குறித்துரைத்த தொகை உத்தரவாதக் கால எல்லை முடியும் வரை பிடித்து வைக்கப்பட வேண்டிய போதிலும், ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்ட எவ்வித கொடுப்பனவுகளிலிருந்தும் அவ்வாறான பிடித்து வைத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (v) 5.4.12 ஆம் வழிகாட்டல் | மீளாய்வாண்டில் ஒப்பந்தகாரர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 141,073,130 தொடர்பில் வரிச் சிட்டையினைப் பெற்றுக்கொள்ளாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், பெறுமதிசேர் வரி (VAT) இனை உறுதிப்படுத்துவதற்காக அது தொடர்பில் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டுக்கான சபையின் செயற்பாட்டு விளைவு ரூபா 63,189,722 தேறிய இலாபமொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 49,629,173 ஆகும். இதற்கமைய முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 13,560,549 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இதற்காக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சபையின் ஏனைய வருமானங்கள் ரூபா 13,263,743 இனாலும் அரசாங்க மானியம் ரூபா 10,000,000 இனாலும் அதிகரித்திருந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தன. இருப்பினும், இவ்வறிக்கையின் 2.2.1 (ஆ) மற்றும் (இ) பந்திகளின் பிரகாரமான மீளாய்வாண்டிற்கான செலவினங்கள் மற்றும் தவறாகக் காட்டப்பட்டிருந்த வருமானங்கள் சீராக்கப்பட்டிருப்பின் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 11,754,623 ஆல் குறைவடைந்திருக்கும்.

### 3.2 செலவினங்களில் அசாதாரண அதிகரிப்பு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் சபையின் செலவினங்களில் பின்வருமாறு அசாதாரண அதிகரிப்புகள் அவதானிக்கப்பட்டன.

| | 2012 | 2011 | வேறுபாடு | % |
|---|---|---|---|---|
| | ----------------- | -------------- | ---------------- | -------------- |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மின்சாரம் | 17,596,510 | 7,269,782 | 10,326,728 | 142 |
| ஊக்குவிப்புப்படி மற்றும் மேலதிகநேரம் | 31,725,549 | 11,075,249 | 20,650,300 | 186 |
| ஊழியர் நலனோம்பல் | 3,632,148 | 993,389 | 2,638,759 | 266 |
| பிரயாணச் செலவினம் - உள்நாடு | 4,959,019 | 624,130 | 1,334,889 | 696 |
| பணிப்பாளர் சபை படிகள் | 1,391,206 | 559,858 | 831,348 | 148 |
| பிரச்சார செலவினம் | 5,007,782 | 1,939,219 | 3,068,563 | 158 |
| பாதுகாப்புச் சேவை | 9,087,361 | 3,402,066 | 5,685,295 | 167 |
| அச்சிடல் மற்றும் எழுதுகருவி | 6,014,733 | 1,647,980 | 4,366,753 | 265 |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் | 3,277,375 | 1,644,679 | 1,632,696 | 99 |
| வாகன மேந்தலை | 11,170,449 | 2,572,220 | 8,598,229 | 334 |
| தரகு மற்றும் கழிவு | 8,513,517 | 2,020,462 | 6,493,055 | 321 |
| அனசரணைகள் | 4,567,550 | 753,461 | 3,814,089 | 506 |
| வர்த்தகக் கண்காட்சி | 666,906 | 29,413 | 637,493 | 2167 |
| விற்பனை மேம்படுத்தல் செலவினம் | 2,577,754 | 119,850 | 2,397,904 | 1,333 |
| கடன் வட்டி | 22,134,804 | 3,021,277 | 19,113,527 | 632 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் விற்பனை வருமானம் 73 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், அதற்கிணையாக செலவினம் 77.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) இருந்த போதிலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பிரயாணச் செலவினம், அச்சிடல் மற்றும் எழுதுகருவி, வாகன மேந்தலைச் செலவினம், தரகு மற்றும் கழிவுகள், அனசரணை வழங்குதல், வர்த்தகக் கண்காட்சி, விற்பனை மேம்படுத்தல் செலவினம் மற்றும் கடன் வட்டிகளில் பாரிய அதிகரிப்புகள் மீளாய்வாண்டில் இடம்பெற்றிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2012 ஆம் ஆண்டில் தும்முல்லை மற்றும் ஏனைய கிளைகளின் இலக்கிடப்பட்ட விற்பனைகள் மற்றும் உள்ளபடியான விற்பனைகளிற்கிடையில் பின்வரும் வேறுபாடுகள் வெளிப்பட்டன.

| கிளை | இலக்கிடப்பட்ட விற்பனை | உள்ளபடியான விற்பனை | வேறுபாடு | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | % |
| தும்முல்லை | 156,718 | 261,208 | 104,490 | 67 |
| கோட்டை | 131,492 | 119,808 | (11,684) | (9) |
| கடுபெத்த | 42,692 | 35,377 | (7,315) | (17) |
| கட்டுநாயக்க | 27,092 | 9,256 | (17,836) | (66) |
| கண்டி | 40,292 | 22,761 | (17,531) | (44) |
| காலி | 40,292 | 10,535 | (29,757) | (74) |
| நுவரெலியா | 7,892 | 1,331 | (6,561) | (83) |
| மொனராகலை | 2,381 | 1,116 | (1,265) | (53) |
| குருனாகல் | 1,265 | 1,110 | (155) | (12) |
| பத்தரமுல்லை | 29,492 | 16,889 | (12,603) | (43) |
| புதிய கிளை (05) | 20,528 | 10,174 | (10,354) | (50) |
| | 500,136 | 489,565 | | |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 15 லக்சல காட்சிக் கூடங்களில் ஒரு காட்சி கூடத்தில் எதிர்பார்த்த விற்பனை இலக்கிற்கு மேலாக 67 சதவீத இலக்கு அடையப்பட்டிருந்ததுடன், 09 காட்சி கூடங்களில் எதிர்பார்த்த விற்பனை இலக்குகளில் 50 சதவீதத்திற்கு மேல் அடையப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் விற்பனை வருமானம் ரூபா 489,564,350 ஆக காணப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டில் விற்பனை வருமானம் ரூபா 276,368,521 ஆகும். இதன்படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் விற்பனை வருமானம் ரூபா 213,195,829 ஆல் அல்லது 77 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 4.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

### 4.2.1 அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு முரணாக அரசாங்க நிறுவனங்களிடமிருந்து சபைக்கு நிர்மாண ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள்ளல்

நட்டத்தில் நடாத்திச்செல்லப்பட்டு வந்த சபையினை இலாபத்தில் நடாத்திச் செல்வதற்காக 2006 பெப்ரவரி 01 ஆந் திகதிய அமைச்சரவை அமப/06/0211/231/004 ஆம் இலக்க உள்நாட்டு கைத்தொழிலாளர்களை பாதுகாப்பதற்கும் சபையின் கீழ் நடாத்திச்செல்லப்படும் தச்சுத்தொழில் உற்பத்திப் பொருட்களை கேள்வி கோரல் அல்லது விலைமனுக் கோரலின்றி அரசாங்க நிறுவனங்களால் கொள்வனவு செய்யப்படுவதற்கு முன்னுரிமை வழங்குவதற்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. மேலும் விலைமனுக் கோரல் சபையின் உறுப்பினர்களில் ஒருவராக திறைசேரியின் பிரதிநிதியொருவரை பங்குகொள்ளச் செய்தல் வேண்டும் எனவும் அமைச்சரவையினால் பணிப்புரை வழங்கப்பட்டிருந்தது.

இருந்த போதிலும், சபையினை தாபித்தல் அதிகாரச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படாத கருமங்களையேனும் நிறைவேற்றக்கூடியதாகவும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டிருந்த “இருப்பினும், குறித்த விலைகள் திறைசேரியின் பிரதிநிதியொருவரை உள்ளடக்கிய உத்தியோகத்தர் சபையொன்றால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்” என்ற வாசகத்தை முழுமையாக புறக்கணித்தும் அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு பின்னிணைப்பு 01 ஆக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆரம்ப பின்னிணைப்பிற்கு முற்றிலும் வேறுபட்ட கருமங்களான கனணித் தரவு கம்பிகளை இணைத்தல், மின்சார மற்றும் தொலைபேசிக் கம்பிகளை இணைத்தல், பொறியியல் வேலைகள் போன்ற வேலைகளை உள்ளடக்கிய பல்வேறு வகைப்பட்ட

ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் பின்னிணைப்பை மாற்றியமைத்து அதனை அமைச்சரவை விஞ்ஞாபனத்துடன் அரசாங்க நிறுவனங்களிற்கு அனுப்பிவைத்து அந்நிறுவனங்களை தவறாக வழிநடாத்தி வேலைகள் மற்றும் சேவைகளை சபைக்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதன்படி, மீளாய்வாண்டின இறுதிவரை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணான நிர்மாண வேலைகளின் பெறுமதி ரூபா 329 மில்லியனாகும்.

எவ்வாறாயினும், சபையினால் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்த வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருக்காமை, தாமதிக்கப்படல், கைவிடப்பட்டிருத்தல், தரமற்றிருத்தல் போன்ற காரணங்களால் பிரச்சினைக்குட்பட்டிருந்தது அவ்வாறான சில ஒப்பந்தங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **சேவை நிறுவனம்** | **விபரம்** | **நிலைமை** |
|---|---|---|
| ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை | வெலிக்கடை சிறுவர் பூங்கா மற்றும் நகர சபை வளவில் சூர்ய சக்தியினால் இயங்கும் 20 மின்சார வெளிச்ச முறைமைகளை பொறுத்துதல் | தரமற்ற முறையில் நிர்மாணித் திருந்தமை காரணமாக சூர்ய சக்தி உபகரணங்கள் செயலிழ ந்திருத்தல். இது தொடர்பில் கோட்டை மாநகர சபை சபைக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது. |
| தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை | ஒலிபரப்பு முறைமை, குளிரூட்டல் இயந்திரத்தைப் பொருத்துதல், கேபல் இணைப்பு போன்ற பல்வேறு வேலைகள் | குறித்த நிறுவனத்தினால் பல்வேறு குறைபாடுகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | ஒலிபரப்புக் கோபுரத்தை நிர்மாணித்தல் | இடையில் கைவிடப்பட்டுள்ளது |
| கைப்பணிகள் மன்றம் | கட்டிட நிர்மாணம் | பல்வேறு குறைபாடுகள் காணப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| கண்டி பொது வைத்தியசாலை | சலவை இயந்திர திருத்தம் | பல்வேறு குறைபாடுகள் காணப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

**4.2.2 சபையில் பொறியியல் பிரிவொன்றை நிறுவுதல் மற்றும் உள்ளக வெளியக ஒப்பந்தங்களை சபையிடம் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு ஒப்படைத்தல்**

---

பின்னர் திருத்தப்பட்ட மேலே 4.2.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் நிர்வாக அதிகாரத்தரப்பால் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2009/44 மற்றும் 2010/01 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானங்களின் பிரகாரம் 2009 ஒக்தோபர் மாதத்தில் சபையால் பொறியியல் பிரிவொன்று நிறுவப்பட்டிருந்தது. 2010/01 ஆம் இலக்க பணிப்பாளர் சபை விஞ்ஞாபனத்தின் படி ''எந்த வகையான பொறியியல் வேலைகளையும் செய்வது'' இப்பிரிவின் கருமங்களாகும் என குறிப்பிடப்பட்டிருந்ததுடன், சபைக்கு உதவியாக தாபிக்கப்பட்டிருந்த இலாப நிலையமொன்றாக நடாத்திச் செல்வதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், இப்பிரிவின் நடவடிக்கைகள் 2011 ஏப்ரல் மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இடைநிறுத்தப்பட்டிருந்த பொறியியல் பிரிவு 2011 யூன் 17 ஆந் திகதிய 2011/29 ஆம் இலக்க பணிப்பாளர் சபை விஞ்ஞாபனத்தினால் அதன் நடவடிக்கைகள் மீளமைக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டு மேற்குறிப்பிட்ட அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் அரசாங்க நிறுவனங்களின் நிர்மாணங்கள், உள்ளக நிர்மாணங்கள், தச்சுத்தொழில், சிறு பொறியியல் நடவடிக்கைகள், வழங்கல் மற்றும் சேவைகளை மேற்கொள்வதற்காக புதிய பிரிவொன்றாக தாபிப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. அதன் படி சபையால் பதிவுசெய்யப்பட்டிருந்த 04 ஒப்பந்தக்காரர்களுக்கு எல்லா ஒப்பந்தங்களையும் வழங்கவதற்கும், கட்டிட பேணுகை நடவடிக்கைகளிற்கான ரூபா 2.5 மில்லியனுக்குக் குறைந்த ஒப்பந்தங்களை அதுவரை சபையின் பொறியியல் பிரிவொன்றாக காணப்பட்டு பின்னர் தனியார் நிறுவனமொன்றாகத் தாபிக்கப்பட்டிருந்த மேற்படி நிறுவனங்களில் ஒன்றிற்கு வழங்குவதற்கும், வெளிவாரி ஒப்பந்தங்களிலிருந்து அவர்களிற்குக் கிடைக்கும் வருமானத்தில் 2 சதவீதம் - 8 சதவீதத்திற்கு இடைப்பட்ட இலாப வீதாசாரத்தினை சபைக்குப் பெற்றுக்கொள்வதற்கும், சபையின் சார்பில் சேவை வழங்கும் நிறுவனங்களுடனான சகல உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திடுவதற்கான அதிகாரத்தை சபையின் தலைவர், பணிப்பாளர் சபை செயலாளர் அல்லது பணிப்பாளர் (நிதி) இற்கு ஒப்படைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சகல ஒப்பந்த வேலைகளும் இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபையின் (லக்சல) பொறியியல் பிரிவினால் மேற்கொள்ளப்படும் என உடன்படிக்கையில்

கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், லக்சல இற்கு உரித்தாகக் காணப்பட்ட பிரிவொன்று அல்லது அவ்வாறான பிரிவிற்கு தேவையான மனித அல்லது பௌதீக வளம் காணப்படவில்லை.

(ஆ) 04 ஒப்பந்தகாரர்களை பதிவுசெய்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையொன்று பின்பற்றப்படாதிருந்ததுடன் இந்த எந்தவொரு நிறுவனமும் குறித்த துறையில் நிர்மாண அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திடம் (ICTAD) பதிவுசெய்யப்பட்ட நிறுவனமாக காணப்படாமை.

(இ) சகல ஒப்பந்த வேலைகளும் லக்சல நிறுவனத்தின் பெயரால் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது தொடர்பான கணக்குகள் லக்சல நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2.3 கைப்பணிகள் பயிற்சிப் பிரிவை தேசிய கைப்பணிகள் மன்றத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை.**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 08/2322/349/015 ஆம் இலக்க 2008 திசெம்பர் 08 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி சபையின் கீழ் செயற்பட்டிருந்த கைப்பணிகள் பயிற்சிப் பிரிவை தேசிய கைப்பணிகள் மன்றத்திற்கு ஒப்படைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் இறுதி வரை அச்செயற்பாடு முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. மேற்படி அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கிராமியக் கைத்தொழில் மற்றும் சுய தொழில் மேம்பாட்டு அமைச்சுச் செயலாளரின் 2009 ஏப்ரல் 06 ஆந் திகதிய 3/4/2/46 ஆம் இலக்க கடிதத்தினால் 2009 மே 01 முதல் சபையின் கீழ் காணப்பட்ட கைப்பணிப் பயிற்சிப் பிரிவிற்குரிய 189 ஊழியர்கள் தேசிய கைப்பணிகள் பயிற்சி நிறுவனத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அப்பயிற்சிப் பிரிவின் கீழ் காணப்பட்ட 132 பயிற்சி நிலையங்களை கைப்பணிகள் மன்றத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அப்பயிற்சி நிலையங்கள் இயங்கிய 70 கட்டிடங்கள் சபைக்கு உரித்தாகக் காணப்பட்டன. அதன்படி, அக்கட்டிடங்களில் காணப்பட்ட உபகரணங்கள், பொறி இயந்திரங்கள், பொறிகள் மற்றும் ஆயுதங்கள் போன்றவற்றின் பெறுமதிகளை மதிப்பிட்டு தேசிய கைப்பணிகள் மன்றத்திற்கு ஒப்படைக்க வேண்டிய போதிலும், ஊழியர்கள் மற்றும் ஆதனங்கள் கையளிக்கப்பட்டு ஏறத்தாழ 04 ஆண்டுகள் கடந்த

பின்னரும் குறித்த ஆதனங்களை சட்டரீதியாக ஒப்படைப்பதற்கு 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளிற்குரிய சபையின் நிதிக்கூற்றுக்களினால் இந்நிலைமை வெளிக்காட்டப்படாதிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் கைப்பணிகள் பயிற்சிப் பிரிவின் கீழ் 2009 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த பின்வரும் மீதிகள் அவ்வாறே 2012 திசெம்பர் 31 இல் காணப்பட்ட மீதிகளாக உள்ளடக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

| சொத்துக்கள்/பொறுப்புக்கள் வகை | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 46,298,422 |
| நடைமுறை சொத்துக்கள் | 31,351,316 |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 12,345,384 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 17,591,622 |

## 4.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கைப்பணித் தொழில் பயிற்சிப் பிரிவு தேசிய கைப்பணிகள் மன்றத்திற்கு 2009 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், கடுபெத்த தொழில் பயிற்சிப் பிரிவு கைப்பணிகள் மன்றத்திற்குக் கையளிக்கப்படாமையால் அப்பயிற்சிப் பாடசாலையில் காணப்பட்ட மரம் அரிதல் இயந்திரம், பலகை சீவுதல் இயந்திரம் மற்றும் அது தொடர்பான ஏனைய இயந்திரங்கள் பயன்படுத்தப்படாதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டும் காணப்பட்டன.

(ஆ) கடுபெத்த தொழில் பயிற்சிப் பிரிவிற்குச் சொந்தமான அண்ணளவாக 20,000 சதுர அடிகள் கொண்ட மூன்று மாடிக் கட்டிடம் மற்றும் 40 இரட்டைக் கட்டில்களுடன் கூடிய விடுதி என்பன 03 ஆண்டுகளாக பயன்படுத்தப்படாதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டும் காணப்பட்டன.

(இ) இதற்கு மேலாக அண்ணளவாக 8,000 சதுர அடிகள் கொண்ட உறைகள் உற்பத்தி நிலையக் கட்டிடம், மேசைகள் மற்றும் அதற்குரிய 80 நாற்காலிகள் பயன்படுத்தப்படாது காணப்பட்டன.

### 4.4 இனங்காணப்பட்ட இழப்புகள்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் படி நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய உதவு தொகைகளை உரிய தினத்தில் செலுத்தாமை காரணமாக ரூபா 538,405 தொகை மிகைவிதிப்பாக அறவிடப்பட்டிருந்தது.

### 4.5 தெளிவான மோசடிகள்

சபையினால் சபைக்குரித்தாக 31 நடைமுறைக் கணக்குகள் பேணிவரப்பட்டிருந்ததுடன் ஒரு வங்கிக் கணக்கிலிருந்து இன்னுமோர் வங்கிக் கணக்கிற்கு பணம் மாற்றீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்ட போதிலும், அப்பணம் குறித்த வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்படாது காசாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. தெரிவுப் பரிசோதனையின் படி, அவ்வாறான இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 650,000 வங்கிக் கணக்குகளிற்கிடையே பணப் பரிமாற்றம் இடம்பெறாதிருந்ததுடன், அது தொடர்பில் விசாரணை செய்ததில் ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட உறுதிச்சீட்டுக்களுக்கு மாறுபட்ட விளக்கங்கள் தரப்பட்டு மேலும் இரு உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இதன் படி ஒரு கொடுக்கல்வாங்கலிற்கு இரண்டு வகையான உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை ஐயத்திற்கும் சர்ச்சைக்குரியதுமாக காணப்பட்டமையால் இவ்வாறான கொடுக்கல்வாங்கல்கள் இன்னும் காணப்படவில்லை என்பதனை புறக்கணிக்க முடியாதுள்ளதுடன் அவ்வாறே சபையின் நிதிகள் துஷ்பிரயோகிக்கப்படவில்லை என்பதனையும் புறக்கணிக்க முடியாதுள்ளது.

### 4.6 ஊழியர் பணிக்கொடை ஏற்பாடு முதலீடு செய்யப்பட்டிருக்காமை

சபையினால் 2012 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, ஊழியர் பணிக்கொடை நிதியத்திற்காக ரூபா 28,417,509 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும்,

எதிர்கால பொறுப்புக்களை எதிர்கொள்ளும் விதத்தில் அத்தொகை முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(5)(டீ) பிரிவின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வுத் திட்டமொன்றைத் தயாரித்து அதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், சபையில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் வெற்றிகரமாக செயற்படுத்தப்படுவதனை ஆய்ந்தறிவதற்கும், கணக்குகள் மற்றும் ஏனைய அறிக்கைகளில் நம்பிக்கை கொள்ளக்கூடிய விதத்தில் அன்றாட கொடுக்கல் வாங்கல்களிற்குரிய உறுதிச்சிட்டைகள் அடங்கலான நிதிக்கூற்றுக்கள் பரிசீலிக்கப்பட வேண்டிய போதிலும், சர்ச்சைக்குரியதாக காணப்பட்ட வேலைகள், நிர்மாண ஒப்பந்தங்கள் மற்றும் பல்வேறு வகைப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பிலான கணக்காய்வு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

சபையினால் 2011 – 2013 வரையான ஆண்டுகளை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், கூட்டிணைந்த திட்டம் காலத்திற்கேற்ப மீளாய்வுசெய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 கொள்வனவுத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் சபையால் 2012 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

6. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) ஒப்பந்தங்கள் கட்டுப்பாடு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் கட்டுப்பாடு

(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு

ஒப்பம்: எச்.ஏ.எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2013.10.17

திரு. டபிள்யு. பிரேமானந்தா

உதவிக் கணக்காய்வாளர் நாயம்,

கணக்காய்வாளர் நாயகத் திணைக்களம்,

இல: 306∴72,பொல்துவை வீதி,

பத்தரமுல்லை.

ஐயா,

**இலங்கை கைப்பணிகள் சபையின் 2012 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் உறுப்புரையின் அடிப்படையிலான கணக்காய்வு அறிக்கை.**

மேற்குறித்த அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பான எனது விளக்கங்களை பின்வருமாறு உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன்.

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) வங்கியினால் வழங்கப்படும் வங்கிக் கடன்கள் அனைத்தையும் நிதித்கூற்றுக்களின் ஊடாக வெளிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) மீளாய்வாண்டுக்கான செலவுகளில் சில சேரவேண்டிய ஒதுக்கீட்டை கணிக்கும் போது தவறவிடப்பட்டிருந்தன. அவற்றைச் செம்மையாக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(இ) அடிப்படையில் ஒப்பந்தம் 10 வருட காலத்துக்காக கைச்சாத்திடப்பட்டுள்ளமையினால் கிடைக்கப் பெற்ற நன்கொடையை 10 வருடம் முழுவதிலும் வருமானத்தில் வரவாகப் பதிவதற்கு கொள்கைத் தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் தீர்மானத்திற்கு இணங்க குறித்த குத்தகைக் காலம் 35 வருடங்கள் வரை மாற்றப்பட்டுள்ளமையினால் அதற்கான செம்மையாக்கங்கங்களை 2013 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஈ) விடயங்கள் மாற்றமடைந்த போதிலும் அடிப்படையில் நடைமுறைச் சொத்துக்களின் மொத்தப் பெறுமதி மாற்றமடையவில்லை. சுட்டிக்காட்டப்பட்டவாறு 2013 இறுதிக் கணக்குகளில் அவற்றைச் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(உ) நிலையான வைப்பில் செய்யப்பட்டுள்ள முதலீடுகள் ஒரு வருட காலத்திற்குரியவை (குறுகிய காலம்) என்பதனால் நடைமுறைச் சொத்துக்களின் காசு மற்றும் காசுகுச் சமனானவைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

(ஊ) இச்சொத்துக்கள் பல வருடங்களாக பயன்படுத்தப்படாது செயற்பாடின்றிக் காணப்பட்டமையினால் மீளாய்வாண்டிற்காகப் பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருக்கவில்லை. சொத்துக்கள் பௌதிக ரீதியில் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

**2.2.2 தீர்க்கப்படாத மீதிகள்**

பல வருடங்களாக தீர்க்கப்படாது நிலுவையாகவுள்ளவற்றில் அதிகமானவை சிறு கைத்தொழில் திணைக்களத்தின் மூலம் அல்லது கைப்பணித் திறன் பயிற்சிப் பிரிவின் மூலம் ஏற்பட்ட

67

நிலுவையாகவுள்ளன. இந்நிலுவைகளை ஏடுகளிலிருந்து பதிவளிப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 2.2.3 கணக்காய்வுக்கான சாட்சிகள் காணப்படாமை

ரூபா 141,754,361 பெறுமதியான நிலையான சொத்துக்கள் இலங்கை கைப்பணிகள் சபை மற்றும் கைப்பணித் திறன் பயிற்சிப் பிரிவின் மீதிகளைக் காட்டுகின்றன. நடைமுறைச் சொத்துக்களைப் பௌதிக ரீதியில் உறுதிப்படுத்தியதன் பின்னர் நிலையான சொத்துப் பட்டியலைத் தயாரித்து இற்றைப்படுத்தும் பணி சுயாதீன தொழில்சார் கணக்கீட்டுக் கம்பனியொன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மீதிகளை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்ககப்பட்டுள்ளன.

ரூபா 141,073,103 பெறுமதியான தொடரும் வேலைகள்

ஒப்பந்தக் கொடுப்பனவு ஆவணமும் அதற்கான கொடுப்பனவு வவுச்சர்களும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ரூபா 103,970,740 பெறுமதியான நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் வரவுகள்

இம்மீதிகள் செயற்திட்டக் கணக்கு கைப்பணித் திறன் பயிற்சிக் கணக்கு என்பவற்றின் மீதிகளை உள்ளடக்கியதாகும். இம்மீதிகள் பல வருடங்களாகத் தொடர்ந்து காணப்பட்டு வருவதனால் அவற்றைத் திருத்திச் செம்மையாக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்ககப்பட்டுள்ளன.

ரூபா 29,516,172 பெறுமதியான செலவுகள்

இதற்கான செலவுகளுக்கான கொடுப்பனவு வவுச்சர்கள் அனைத்தும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.2.4 சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றை அனுசரித்துச் செயற்படாமை

(அ) உள்நாட்டு கைப்பணிப் பொருட்களை விற்பனை செய்வதற்கும் சந்தை ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதுடன் அவை சிறப்பாக வெற்றியளித்து திருப்தியான பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. வெளிநாட்டுச் சந்தைச் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்றின் கீழ் சந்தை ஊக்குவிப்புச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) i. நி.பி 177

தினமும் அனைத்து விற்பனைப் பணங்களும் அன்றைய தினமே அல்லது அதற்கு அடுத்துவரும் தினத்தில் வங்கியில் வைப்புச் செய்யப்பட வேண்டும் என்றும் அவற்றைச் செலவுகளுக்குப் பயன்படுத்தக் கூடாது என்றும் முகாமையாளர்கள் அனைவருக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

ii. நி.பி. 260 மற்றும் நி.பி 385

ஒவ்வொரு கொடுப்பனவும் அக்கொடுப்பனவைப் பெறுபவரின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தியதன் பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கான வவுச்சர்களில் பணத்தைப் பெற்றுக் கொண்டவர்களின் கையொப்பத்தைப் பெற்றுக்கொண்டு அதற்கான பற்றுச்சீட்டையும் பெற்று தனியான ஆவணமொன்றில்

அடையாள அட்டை இலக்கத்தைக் குறித்துக்கொண்டு கையொப்பத்தை பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

iii. நி.பி. 394 (இ) மற்றும் நி.பி 396 (ஈ)

திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**(இ) திறைசேரிச் சுற்றறிக்கைகள்**

I மற்றும் II ஆம் நிலையான சொத்துக்கள் பௌதிக ரீதியில் உறதிப்படுத்தப்பட்டதன் பின்னர் நிலையான சொத்துக்களின் பட்டியலை இற்றைப்படுத்துவதற்கு சுயாதீனமான அதிகாரம்பெற்ற கணக்கீட்டுக் கம்பனியொன்றிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

iii. (அ) 2009 ஆம் ஆண்டு வரையில் நட்டத்தில் இயங்கி வந்து 2010 ஆம் ஆண்டில் ஓரளவு இலாபமீட்டும் நிலைக்கு மாற்றுவதற்காக மீள்கட்டமைத்தலின் கீழ் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானங்களுக்கு மேலதிகமாக ஊழியர்களின் பங்களிப்பையும் குறைவின்றிப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருந்தன. ஊழியர்களை ஊக்குவிக்கும் செயற்பாட்டின் முதற் செயற்பாடாக பணிப்பாளர் சபையின் அங்கிகாரத்துடன் 2011 ஆம் ஆண்டுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு 2012 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும், 2012 ஆம் ஆண்டுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவை 2013 ஆம் ஆண்டில் உரிய சுற்றறிக்கைக்கு இணங்க தலா ரூபா 7,500 வீதம் செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) இத்தொகை மீள அறவிடப்பட்டுள்ளது. அதற்கான பற்றுச்சீட்டுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

iv. (அ)2012 ஆம் ஆண்டில் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. மேலும் இலங்கைக் கைப்பணிகள் சபை அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் 2009.05.15 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1601/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் அரச தொழில்முயற்சிகள் முகாமை நிறுவனத்தின் (ஐநுஆயு) கீழ் கொண்டுவரப்பட்டது. அதனடிப்படையில் மீள் கட்டமைக்கப்பட்டு சுய நிதியீட்டத்தின் அடிப்படையில் இலாபமீட்டுவதற்கு ஊழியர்களின் பங்களிப்பும் ஊக்குவிப்பும் அத்தியவசியமானதாகும். மேலும் அனைத்துக் காட்சியறைகளையும் 365 நாட்களிலும் திறந்து வைப்பதற்கும் சேவைக்காக அர்ப்பணிப்பதற்தாக ஊழியர்களுக்கு நிதிப் பயன்களை வழங்க வேண்டும். அதனடிப்படையில் 2012 ஆம் ஆண்டில் இக்கொடுப்பனவு வழங்கப்பட்ட போதிலும் 2013 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியுடன் இக்கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) மேலும் இக்கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள 16 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வழங்கப்படுவதற்குக் காரணம் அவர்கள் பிரிவுத் தலைவர்களாக உள்ள அதேநேரம் நிறுவனத்தை இலாபமீட்டும் நிலைக்குக் கொண்டுவருவதற்கு நேரடியாகத் தலைமைத்துவம் வழங்கியதன் அவர்களின் பங்களிப்பு இந்த இலாபமீட்டும் தன்மைக்கு உறுதியான முறையில் காரணமாக அமைந்தது. அதனால், அவர்களுக்கு இக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டதுடன் அவர்களது குழுவுக்கும் அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்பு என்பவற்றுக்காக ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

நிலுவையாகவுள்ளன. இந்நிலுவைகளை ஏடுகளிலிருந்து பதிவளிப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**2.2.3 கணக்காய்வுக்கான சாட்சிகள் காணப்படாமை**

ரூபா 141,754,361 பெறுமதியான நிலையான சொத்துக்கள் இலங்கை கைப்பணிகள் சபை மற்றும் கைப்பணித் திறன் பயிற்சிப் பிரிவின் மீதிகளைக் காட்டுகின்றன. நடைமுறைச் சொத்துக்களைப் பௌதிக ரீதியில் உறுதிப்படுத்தியதன் பின்னர் நிலையான சொத்துப் பட்டியலைத் தயாரித்து இற்றைப்படுத்தும் பணி சுயாதீன தொழில்சார் கணக்கீட்டுக் கம்பனியொன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மீதிகளை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்ககப்பட்டுள்ளன.

ரூபா 141,073,103 பெறுமதியான தொடரும் வேலைகள்

ஒப்பந்தக் கொடுப்பனவு ஆவணமும் அதற்கான கொடுப்பனவு வவுச்சர்களும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ரூபா 103,970,740 பெறுமதியான நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் வரவுகள்

இம்மீதிகள் செயற்திட்டக் கணக்கு கைப்பணித் திறன் பயிற்சிக் கணக்கு என்பவற்றின் மீதிகளை உள்ளடக்கியதாகும். இம்மீதிகள் பல வருடங்களாகத் தொடர்ந்து காணப்பட்டு வருவதனால் அவற்றைத் திருத்திச் செம்மையாக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்ககப்பட்டுள்ளன.

ரூபா 29,516,172 பெறுமதியான செலவுகள்

இதற்கான செலவுகளுக்கான கொடுப்பனவு வவுச்சர்கள் அனைத்தும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**2.2.4 சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றை அனுசரித்துச் செயற்படாமை**

(அ) உள்நாட்டு கைப்பணிப் பொருட்களை விற்பனை செய்வதற்கும் சந்தை ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதுடன் அவை சிறப்பாக வெற்றியளித்து திருப்தியான பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. வெளிநாட்டுச் சந்தைச் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்றின் கீழ் சந்தை ஊக்குவிப்புச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) i. நி.பி 177

தினமும் அனைத்து விற்பனைப் பணங்களும் அன்றைய தினமே அல்லது அதற்கு அடுத்துவரும் தினத்தில் வங்கியில் வைப்புச் செய்யப்பட வேண்டும் என்றும் அவற்றைச் செலவுகளுக்குப் பயன்படுத்தக் கூடாது என்றும் முகாமையாளர்கள் அனைவருக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

ii. நி.பி. 260 மற்றும் நி.பி 385

ஒவ்வொரு கொடுப்பனவும் அக்கொடுப்பனவைப் பெறுபவரின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தியதன் பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கான வவுச்சர்களில் பணத்தைப் பெற்றுக் கொண்டவர்களின் கையொப்பத்தைப் பெற்றுக்கொண்டு அதற்கான பற்றுச்சீட்டையும் பெற்று தனியான ஆவணமொன்றில்

ஐஐ. உரிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

ஐஐஐ. நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கான காலப் பகுதிகளைக் கவனத்தில் எடுத்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஐஏ. கடந்த காலத்தில் அவ்வாறு பணம் நிறுத்தி வைக்கப்படாத அதேநேரம் அவ்வாறு செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏஐஐ. மீளாய்வாண்டிற்கான வரிப் பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுகொள்ளாது கொடுப்பனவுகள் செய்யப்பட்ட போதிலும் தற்போது ஒப்பந்தச் செயற்பாடுகளுக்கு பெறுமதி சேர் வரி உள்ளடக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களைப் பெறவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4.2 சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்கள்

4.2.1 இது தொடர்பில் காணப்பட்ட கோவைகளுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சுட்டிக்காட்டப்பட்ட சேவை நிறுவனங்களில் காணப்படும் குறைபாடுகளை குறித்த நிறுவனங்களுடன் கலந்துரையாடி இச்செயற்பாடுகளைச் செய்த ஒப்பந்தக்காரர்களுடனும் கலந்துரையாடி சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

4.2.2 (அ) மற்றும் (ஆ)

காலத்துக்குக் காலம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து இப்பிரிவினால் நிறுவனத்தின் உள்ளகச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2014 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் அனைத்துச் செயற்பாடுகளையும் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(இ) 2012 ஆம் ஆண்டில் லக்சல நிறுவனத்தினால் வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தச் செயற்பாடுகளுக்காகக் கிடைக்க வேண்டிய காசோலைகள் "தலைவர் - கைப்பணிகள் சபை" என்ற பெயரில் கிடைத்துள்ளன. ஒப்பந்த வேலைகளுக்காகச் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் சபையின் காசோலைகள் மூலம் உரிய நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்டுள்ளன. இக்கொடுக்கல் வாங்கல்களுக்காக சபைக்கு கிடைக்க வேண்டிய இலாபம் குறித்த வருடத்திற்கான இலாப நட்டக் கணக்கில் வேறு வருமானங்கள் என்ற தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளன. இப்பெறுகைகளுக்கான பற்றுச்சீட்டுக்களும் கொடுப்பனவுகளுக்கான ஒவ்வொரு வங்கிக் கணக்கினதும் வவுச்சர் படிவங்களும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டன.

4.2.3 (அ) கணக்காய்வு முகாமைக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது போன்று உத்தரவுபெற்ற கணக்கீட்டு நிறுவனமொன்றிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2009 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளில் கைப்பணித் திறன் பயிற்சிக் கணக்குகளின் மீதிகள் அவ்வாறே காட்டப்பட்டுள்ளன. 2009 ஆம் ஆண்டில் கைப்பணித் திறன் பயிற்சி பிரிவு கைப்பணித் திறன் சபையிடம் ஒப்படைக்கப்பட்டமையினால் 2009 ஆம் ஆண்டில் காணப்பட்ட கைப்பணித் திறன் பயிற்சிப் பிரிவின் மீதிகளில் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை. 2010 ஆம் ஆண்டில் கணக்குகளில் காணப்பட்ட மீதிகள் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டன. எவ்வாறாயினும், 2010 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டறிக்கையில் 2009 ஆம் ஆண்டில் மாற்றமின்றிக் காணப்பட்ட கைப்பணித் திறன் பயிற்சி கணக்கு மீதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2011 ஆம் ஆண்டிலும் தொழிற்பாட்டிலிருந்த கணக்குகள் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட அதேவேளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள ஆண்டறிக்கையிலும் 2009 ஆம் ஆண்டில் மாற்றமின்றிக் காணப்பட்ட மீதிகள் உள்ளடக்கப்படும். 2012 ஆம் ஆண்டில் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளுடன் 2009 ஆம் ஆண்டில் மாற்றமின்றிக் காணப்பட்ட கைப்பணித் திறன் பயிற்சிப் பிரிவின் மீதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், 2013 ஆம் ஆண்டில், 2009 ஆம் ஆண்டில் மாற்றமின்றிக் காணப்பட்ட மீதிகளைச் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

4.3 செயற்பாடின்மை மற்றும் பயன்பாடு குறைந்த சொத்துக்கள்

(அ), (ஆ), (இ) மீள்கட்டமைப்புச் செயற்பாடுகளின் கீழ் எதிர்காலத்தில் இங்கு குறிப்பிடப்பட்ட பயன்பாடு குறைந்த சொத்துக்களை உரிய முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

4.4 இந்த நிறுவனத்தில் நிதி நெருக்கடிகள் காணப்பட்ட காலத்தில் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு சேர வேண்டிய பணமாக உள்ளது. தற்போது அனைத்து நிலைமைகளையும் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

4.5 பார்வைச் சீர்கேடுகள்

பணத்தைச் செலுத்துவதற்காக பணத்தைப் பெறுபவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட வவுச்சர்கள் விடயத்துக்குப் பொறுப்பான எழுதுநருக்கு கிடைக்காமையினால் முன்னர் பிழையாகத் தயாரிக்கப்பட்ட வவுச்சர்கள் இவ்வாறு கோவைப்படுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இந்த நிதி கிடைப்பனவு வவுச்சர்கள் உரிய ஆரம்பக் கோவைகளில் கோவைப்படுத்தப்பட்டு பின்னர் அவதானிக்கப்பட்டு அரசாங்க கணக்காய்வு உத்தியோகத்தர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

4.6 ஊழியர் பணிக்கொடை மானிய ஒதுக்கீடுகளை முதலீடு செய்யாமை

இது பொதுத் திறைசேரியின் சுற்றறிக்கைகளுடன் ஒப்பிட்டு எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

5.1 உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமொன்றின் கீழ் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5.2 தொழிற்தகைமையுள்ள வெளியாரின் ஒத்துழைப்புடன் எதிர்வரும் 5 வருடங்களுக்கான நிறுவனத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

5.3 2013 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

6. தொகுதி நிர்வாகம்

(அ) கணக்கீடு

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஞயுீ டீ01 கணனித் தொகுதியை அறிமுகப்படுத்தி அதன் மூலம் கணக்கீட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) உள்ளக நிர்வாகம்

உள்ளக நிர்வாகத்தைப் பலப்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமித்தல், கணக்காய்வுக் கூட்டங்களை உரிய விதத்தில் நடாத்துதல், பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடாத்துதல் என்பவற்றின் மூலம் உரிய கட்டளைகள் அனைத்துப் பிரிவுகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

(இ) ஒப்பந்த நிர்வாகம்

உள்ளக ஒப்பந்தங்களை மாத்திரம் மேற்கொள்ளுதல், வெளி ஒப்பந்தங்களை இடைநிறுத்துதல், ஒப்பந்தங்கை வழங்குகின்ற போது பின்பற்ற வேண்டிய அனைத்து செயலொழுங்கு முறைகளையும் பின்பற்றுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

(ஈ) நிதி நிர்வாகம்

வருடம் முழுவதிலும் கணக்காய்வுப் பிரிவினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த நிதி நிர்வாகப் பலவீனங்களைச் சீர்செய்வதற்க நடவடிக்கை எடுத்தல். 2012 ஆம் ஆண்டில் நிகழ்ந்த நிதி நிர்வாகப் பலவீனங்கள் 2013 ஆம் ஆண்டில் சீர்செய்யப்பட்டுள்ளன.

(உ) சொத்து நிர்வாகம்

சொத்து நிர்வாகத்தின் அடிப்படைப் பலவீனமாகக் காணப்பட்ட நிலையான சொத்துப் பட்டியல் மற்றும் பொருட் பட்டியல் தயாரிக்கும் பணி அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டுக் கம்பனியொன்றிடம் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ஊ)சட்ட ஏற்பாடுகள்

இயன்றவரை சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(எ) கொடுப்பனவுகளைச் செலுத்துதல்

நிறுவனத்தினால் செலுத்தப்படுகின்ற கொடுப்பனவுகளுக்கு பொதுத் திறைசேரியினதும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் அனுமதி பெறப்பட்டுள்ளது.

நன்றி

இப்படிக்கு

உண்மையுள்ள

இலங்கை கைப்பணிகள் சபை – லக்சல

அனில் கொஸ்வத்தை

தலைவர்.·.பிரதம நிறைவேற்று அதிகாரி

பிரதிகள் :-

01. செயலாளர் - தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொது பொழுதுபோக்கு விவகார அமைச்சு
02. செயலாளர் - நிதி, திட்டமிடல் அமைச்சு

# பத்து வருட நிதி மீளாய்வு

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

| | 2012<br>ரூபா'000 | 2011<br>ரூபா'000 | 2010<br>ரூபா'000 | 2009<br>ரூபா'000 | 2008<br>ரூபா'000 | 2007<br>ரூபா'000 | 2006<br>ரூபா'000 | 2005<br>ரூபா'000 | 2004<br>ரூபா'000 | 2003<br>ரூபா'000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| புரள்வு | 504,317 | 293,678 | 225,721 | 131,070 | 107,445 | 105,250 | 105,250 | 143,717 | 141,921 | 124,304 |
| ஏனைய வருமானம் | 23,264 | 22,828 | 18,310 | 6,590 | 2,438 | 2,996 | 2,222 | 913 | 2,644 | 8,728 |
| ஆண்டுக்கான மொத்த இலாபம் | 295,153 | 165,256 | 105,857 | 67,250 | 41,210 | 38,501 | 48,921 | 60,700 | 60,935 | 49,555 |
| ஆண்டுக்கான தேறிய இலாபம்/ (நட்டம்) | 63,189 | 49,629 | 6,034 | 6,947 | -24.27 | 23,625 | -2,741 | -3,722 | -1,083 | 3,700 |
| மொத்த சொத்துக்கள் | 1,293,676 | 621,460 | 458,317 | 426,450 | 399,448 | 387,777 | 357,516 | 216,160 | 235,088 | 181,213 |
| மொத்த உரிமை | 584,647 | 220,728 | 171,099 | 165,085 | 67,534 | 218,604 | 214,113 | 96,298 | 104,117 | 81,910 |
| மொத்த பொறுப்புக்கள் | 709,029 | 400,731 | 287,217 | 261,565 | 231,914 | 169,173 | 143,403 | 119,862 | 130,971 | 99,303 |
| மொத்த இலாப விகிதம் | 58 | 56,27 | 45.98 | 50,90 | 38,35 | 36 . 58 | 46 . 48 | 42 . 24 | 42 . 94 | 39 . 87 |
| மேந்தலைச் செலவு விகிதம் | 48 | 47,15 | 51.42 | 74,48 | 103 . 75 | 106,83 | 117 . 12 | 46 . 19 | 45 . 35 | 43 . 85 |
| தேறிய இலாப விகிதம் | 12 | 16,90 | 2.67 | 5,20 | -22.59 | 22 . 45 | -2.60 | -2.59 | -0.76 | 2 . 98 |
| நடைமுறை விகிதம் (தடவை) | 1 | 1.39 | 0.73 | 0.75 | 0 . 57 | 0 . 77 | 0.94 | 1 . 09 | 1 . 23 | 1 . 12 |
| உரிமை மீதான திரும்பல்மு | 0 | 28,71 | 4.9 | (4 2) | (14 . 8) | ( 10 . 8) | (1 . 3) | (3 .9) | (1 .0) | 4 . 5 |

# சபை முக்கிய விடயங்கள்

| ஆயிரம் ரூபாய்களில் | 2012<br>ரூபா'000 | 2011<br>ரூபா'000 |
|---|---|---|
| தேறிய வருமானம் | 504,317,546 | 293,678,576 |
| வரிக்கு முந்திய இலாபம் | 73,189,722 | 50,316,406 |
| தேறிய வருமானத்தின் சதவீதமாக | 14.51% | 17.13% |
| வரிக்குப் பிந்திய இலாபம் | 63,189,722 | 49,629,173 |
| ஈடுபடுத்திய மூலதனம் | | 7.98% |
| பிரதான விகிதங்கள் | | |
| மொத்த இலாப விகிதம் | 58.52% | 56.5% |
| மேந்தலைச் செலவு விகிதம் | 48.62% | 47.1% |
| தேறிய இலாப விகிதம் | 14.51% | 17.1% |
| ஆட்களின் எண்ணிக்கை | 187 | 193 |

# Laksala Branch Network




| விற்பனை நிலைய | முகவரி |
|---|---|
| கோட்டை | 60, யோர்க் வீதி, கொழும்பு 01. |
| தும்முல்லை | 215, பௌத்தாலோக மாவத்தை, தும்முல்லை, கொழும்பு 07. |
| கட்டுபெத்தை | 282/ஏ, காலி வீதி, கட்டுபெத்தை, மொரட்டுவை. |
| கண்டி | 05, சங்கராஜ மாவத்தை, கண்டி. |
| காலி | 74/1, காலி வீதி, காலி. |
| நூதனசாலை | நூதனசாலை கலரி க/பே.<br>தேசிய நூதனசாலை வளாகம், கொழும்பு 7. |
| பத்தரமுல்லை | “ஜனகலா கேந்திரய”, பத்தரமுல்லை. |
| கட்டுநாயக்கா | இடைமாறல் பிரதேசம், பண்டாரநாயக சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கா. |

| விற்பனை நிலைய | முகவரி |
|---|---|
| வெலிப்பன்னை | வெலிப்பன்னை தரிப்பகம்,<br>தென் கடுதிப்பாதை, சேவைப் பிரதேசம் “பி”,<br>விற்பனை நிலையம் ஏ5 மற்றும் ஏ6 |
| குதிரைப்பந்தய மைதான<br>சிறு தரிப்பிடம | குதிரைப் பந்தய மைதான, உடற்பயிற்சி நடை பாதை, ரீட் அவெனியூ, கொழும்பு 7 |
| பின்னவலை | யானைகள் சரணாலயம்<br>பின்னவலை, ரம்புக்கனை |
| பேராதனை | 14, தாவரவியல் பூங்கா, பேராதனை |

Designed by Blu Cube

LAKSALA
State Gift & Souvenir Boutique

215, Bauddhaloka Mawatha, Thummulla, Colombo 07.
Tel : 11 2588316
Email : info@laksala.gov.lk
Web : www.laksala.lk